
www.tamilarangam.net

# மனிதம்

*Manitham*



*23*

**JULI + AUGUST**
ஆடி - ஆவணி
**1993**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யாருக்குச் சொல்லி அழ !

*சென்ற மாதம் "சுவிஸ் தமிழர்" பத்திரிகையின் ஓர் ஆண்டு நிறைவை முன்னிட்டு Bern இல் ஓர் விழா நடைபெற்றது. இவ் விழாவின் பிரதம விருந்தினராக 'பாரிஸ் ஈழநாடு' ஆசிரியர் குகநாதன் அழைக்கப்பட்டிருந்தார். அவர் தனது சொற்பொழிவில் ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஐரோப்பியர்கள் ஏன் கூடுதலாக விவாகரத்து செய்கின்றார்கள் என ஆய்வு செய்ததாகவும் ஆய்வின் முடிவில் எமது கலாச்சாரம் என்று பெண்கள் ஆண்களுடன் கைகுலுக்கக் கூடாது என முடிவிற்கு வந்துள்ளதாகவும் கூறினார். ஐரோப்பியர் இவ்வளவு காலம் கழித்து எமது கலாச்சாரத்தை பின்பற்ற வருவதாக 'நற்சான்றிதழ்' காட்டி, தமிழ்க் கலாச்சாரத்தின் மகிமை பற்றி பேசினார்.*

*இப்படி ஒரு ஆய்வு நடைபெற்றதா? இல்லையா? என்ற விசயத்தினை ஒரு பக்கம் வைப்போம். ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் ஆண்களுடன் ஈடுகொடுத்து அனைத்து வேலைகளிலும் ஓரளவுக்காவது சமபங்களிப்பை செலுத்தி வரும் வேளையில் இப்படி ஓர் பிற்போக்கான முடிவை அவர்கள் சரியானதென ஏற்றுக்கொள்ளவா போகிறார்கள்.*

*எமது கலாச்சாரம் வரைவு செய்துள்ள பெண்ணடிமைத்தனத்தினை ஆதரித்து ஒரு பத்திரிகை ஆசிரியரே பேசும் நிலையை யாரிடம் சொல்ல! அது மட்டுமல்ல நம் நாட்டுப் பெண்கள் ஐரோப்பிய நாடுகளிற்கு வந்தவுடன் சேலை உடுப்பதை விட்டுவிட்டதாக வேறு கூறி குறைப்பட்டுக் கொண்டார். ஆக மொத்தம் கலாச்சாரத்தினை பேணிப் பாதுகாக்க வேண்டியவர்கள் பெண்கள் மட்டும் என்று அவரது பேச்சு மட்டுமென்ன, உடையும்தான் காட்டியது. மடிப்புக் கலையாத 'கோட்' உடன் 'ரை' இனையும் சரிசெய்து கொண்டு மைக் இன் முன்னால் வரும்போது தமிழ்க் கலாச்சாரம் பற்றி பேசுவார் என்று யார் நினைத்திருப்பர் ??*

## EPRLF இல் மீண்டும் உடைவு.... நாபா பெயரில் புதிய கட்சி

EPRLF இயக்கம் மீண்டும் ஒரு தடவை பிளவுபட்டுள்ளது. EPRLF இயக்கத்தில் இருந்து –அது ஆட்சி செய்த மாகாண அரசாங்கத்தில் அமைச்சராக பதவியேற்றிருந்த– அபூயூசுப் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (நாபா பிரிவு) என்கின்ற பெயரில் ஒரு கட்சியை ஆரம்பித்துள்ளார். EPRLF இன் செயலதிபராக இருந்த பத்மநாபாவின் கொள்கைகளை தற்போது EPRLF முன்னெடுக்கத் தவறியுள்ளதே புதிய கட்சியை உருவாக்குவதற்கு காரணம் எனக் கூறியுள்ளார். ஆனால் கட்சிக்குள் நிகழ்ந்த நிதி மோசடியே புதுக் கட்சியின் தோற்றத்திற்கு காரணம் என பரவலாக பேசப்படுகின்றது.

இதைவிட வட.கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாளுக்கும், தற்போதைய செயலதிபர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் இடையில் கருத்து முரண்பாடு வளர்ந்துள்ளது என்றும் பரவலாக உறுப்பினர்களிடையே இருந்த நிதியை ஒருமுகப்படுத்துவதற்கு செயலதிபர் எடுத்த முயற்சியே இப் பிளவுகளுக்கு காரணம் எனவும் கூறப்படுகின்றது. அண்மையில் இந்திய அரசாங்கம் கட்சி நிதிக்காக 60 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது எனவும் கதை அடிபடுகின்றது. கட்சிக்குள் நடைபெறும் பிரச்சினைகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வருமாறு திருமதி பத்மநாபா தற்போதைய செயலதிபரை வேண்டியுள்ளார் எனவும் அறிய வருகின்றது.

புதிய கட்சியை அமைத்த அபூயூசுப் வடக்கு–கிழக்கு இணைப்பு தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் அரசு நடாத்த இருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை தமது கட்சி ஆதரிப்பதாகவும் முஸ்லீம் மக்கள், தமிழ் மக்கள், என்போருக்கிடையேயுள்ள உறவு சீர்குலைந்துள்ள நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வாக்கெடுப்பின் போது தமது கட்சி இணைப்புக்கு ஆதரவாக பிரச்சாரத்தை மேற்கொள்ளும் எனக் கூறியுள்ளார். EPRLF இல் ஏற்பட்டுள்ள இவ் உடைவுக்கு அரசின் கரமும் மறைமுகமாக தொழிற்பட்டுள்ளது எனவும் பேசப்படுகின்றது.

www.tamilarangam.net

# மனிதம்



**JULI + AUGUST**
**ஆடி - ஆவணி**
**1993**

Zwei Monatlich Einmal
(இரு மாதத்திற்கு ஒருமுறை)

*Impressum*
*&*
*Herausgeber :*

**Manitham**
**Postfach - 12**
**3000 Bern - 11**
**SCHWEIZ**

*Redaktion :*
V.Logadas
M. Narendran
S. Ragavan
&
Manitham Redaktion
Komitee

*Abonnement :*
**22 SFr** (Pro Jahr)

*Post konto :*
Manitham
3000 Bern-11
PC:30-37152-1

*Bank Konto :*
Schweizerische
Kreditanstalt
3001 Bern
Manitham
220348-70

*Druck :*
Böhlen Druck AG
4912 Aarwangen

## 1983 யூலை
## 1993 யூலை
## -10 வருடங்கள்!!

1958 க்கு முன்பும், பின்பு 1981 வரைக்கும் இனக் கலவரங்கள் பலவற்றை விழுங்கிக் கொண்டு ஏப்பமிட்ட 'பெருமை' இலங்கை வரலாற்றிற்கு ஏற்கனவே உண்டு. இவை அனைத்தினதும் உச்சம், 1983 யூலை இனப் படுகொலை!

நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்கள் பலர் வெட்டியும், குத்தியும், கொதறியும் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர், காயப்படுத்தப்பட்டனர், விரட்டப்பட்டனர், துரத்தப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் கேட்பாரற்றுச் சூறையாடப்பட்டன. சிறைச்சாலையில் பூட்டி வைக்கப்பட்ட (காந்தியம்-டொக்டர் ராஜசுந்தரம், தங்கத்துரை உட்பட) 53 கைதிகள் தமிழர் என்பதற்காக படுகொலை செய்யப்பட்ட, உலகிலேயே முதல்தரமான அநாகரீக நிகழ்ச்சியும் இந்தக் கறுப்பு யூலையில் தான் நிகழ்ந்தது.

இந்த 83 கறுப்பு யூலை ஒரு கெட்ட சகுனமாக அமைந்த போதும், இன்று 93 யூலை வரையிலான பத்து ஆண்டுகளிலும் தமிழர் அரசியலில், வரலாற்றில் அது ஏற்படுத்திய தாக்கமும், மாற்றமும் அளப்பரியன.

மக்கள் விடுதலை வேண்டும் என்று உணர்வு பெற்றனர். இளைஞர்கள், யுவதிகள் போர்க்குணம் பூண்டனர். சிறியன, பெரியன என்று விடுதலை அமைப்புக்கள் பல தோற்றம் பெற்றன. (பெருத்து, வீங்கி, சீரழிந்து, சிதைந்து போன வரலாறு ஒரு புறம் இருக்கட்டும்)

கூட்டணி மட்டும் ஈழத் தமிழரின் தனிப்பெரும் கட்சி என்ற நிலையில் இருந்து கீழிறக்கப்பட்டது !

▲ இப் புதிய தலைமுறையினர் வீச்சுடன் முன்னேறி மக்கள் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டனர்!

▲ அரச படைகளுக்கெதிரான தாக்குதல்கள் உக்கிரம் பெற்றன!

▲ ஈழத் தமிழர் உலகின் பல பாகங்களுக்கும் அகதிகளாகப் புலம் பெயர்ந்தனர்!

▲ தமிழர் பிரச்சினை சர்வதேசமும் அறியும் வாய்ப்பும் பெற்றது.!

▲ ஈழப் போராட்டத்தின் பின்புலமாக தமிழகம் விளங்கவே பெரிய இயக்கங்கள் பல இந்திய அரசுடன் கைகோர்த்தன!

▲ இந்திய அரசு தமிழர்க்காக நீலிக்கண்ணீர் வடித்தது!

www.tamilarangam.net

ஃ அளவில் பெரியனவாக விளங்கிய இயக்கங்கள் மேலும் மேலும் வீங்கிப்பெருத்தன! (இவ் வீக்கம் நோயின் குணாம்சம் என்பது பலருக்குப் புரியவில்லை)

ஃ ஆயுதப் பழக்கம் சகஜமாகி, வீராவேசம் தலைக்கேற உட்கட்சிக் கொலைகளும், சித்திரவதைகளும் ஒருபுறமும், சகோதர இயக்க அழிப்பு இன்னொரு புறமுமாக தீவிரம் பெற்றன!

உட்கட்சிக் கொலைகள், புலிகள் தொடக்கம் ஏனைய இயக்கங்கள் பலவற்றிலும் தந்திரோபாய (அரச படைகளுக்கெதிரான தாக்குதல் சம்பவத்தின் போது (வேண்டப்படாத சக போராளிகளைக் கொன்றுவிடுதல்) ரீதியில் இடம்பெற்ற போதும், TELO இயக்கம் "நேரு" வை, அவனுக்கான புதைகுழியை அவன் மூலமே வெட்ட வைத்து உணர்வுகளைக் குதறி புதைத்தது போன்ற கொடூரச் சம்பவங்களும்...... PLOT இயக்கத்தில் "பரந்தன் ராஜன்" "சங்கிலி" "மொட்டை மூர்த்தி" போன்றவர்கள் செய்த 'மரண ஓலங்கள்' நிறைந்த உட்கட்சி சித்திரவதைகளும் கொலைகளும்..... கூடவே சந்ததியார் சித்திரைவதைக்கு உட்படுத்தப்பட்டு, கொல்லப்பட்டு, கடலில் எறியப்பட்ட நிகழ்வுகளும்...... இன்னும் மறக்கமுடியாத நிகழ்ச்சியாக விழிகளை உறுத்துகின்றன.

இன்னும் மனோ மாஸ்ரர், நெப்போலியன் போன்று பல போராளிகள் உரிமைகோரா கொலைக்குப் பலியாகினர்.

PLOT உட்பட ஏனைய இயக்கங்கள் பலவும் மாற்று இயக்கத்தவர்களை கொலை செய்வதில் ஒரே தன்மையைக் கொண்டிருந்த போதிலும், அன்று தொடக்கம் இன்றுவரை விடுதலைப் புலிகளே மாற்று இயக்கங்களை அழித்தொழிப்பதில் கைதேர்ந்த வல்லுனர் ஆயினர். கையில் சாப்பாட்டுக் கோப்பையுடன் சாப்பிட்டது பாதி, சாப்பிடாதது பாதி என்ற நிலையில் யாழ்ப்பாணத்துப் பெடியள் தமக்குத் தெரிந்த வழியே உறவினரிடம் தப்பியோட கிழக்கு மாகாணத்தை -மட்டக்களப்பு, திருகோணமலை- சேர்ந்த பையன்கள் ஒன்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிச் சல்லடைகளால் துளைக்கப்பட்டமையும், இன்னும் சில இளைஞர்கள் எரியும் ரயர்களுக்கு நெய் ஊற்றுவதுபோல் உயிருடன் கொழுத்தப்பட்டமையும் TELO இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் கொல்லப்பட்ட பின்பும் அவரது பிணம் சல்லடையாக்கப்பட்ட சம்பவங்களும்.....

1986 இல் TELO, EPRLF இயக்கம் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து..... இற்றைவரை ஏனைய இயக்கங்களும் செயலிழக்கச் செய்யப்பட்டமையும்..... இப் பத்தாண்டுகளில் நிகழ்ந்த மறக்க முடியாத வடுக்கள் ஆகும்.!

ஸ்ரீலங்கா அரச படை தமிழர் மீது ஆங்காங்கே பலவித தாக்குதல்களை மேற்கொண்டு வந்தபோதும், 1987 மேயூன் மாதங்களில் வடமராட்சிப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டு வெட்டியும், குத்தியும், பம்பர் அடித்தும், உயிருடன் தீயில் (பேக்கரியில் உள்ள பாண் சுடும் சூளையிலும் கூட) போட்டும் பல நூற்றுக்கணக்கான உயிர்களைக் காவு கொண்ட 'லிபரேசன் ஒப்பரேசன்' தாக்குதல்களை மறந்து விட முடியாது. (இதன் சூத்திரதாரியான அத்துலத் முதலியும், இத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய கொப்பேகடுவவும் இன்று உயிருடன் இல்லை)

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியப் படையினரின் வருகையும், இவ் வருகைக்கு வழிசமைத்த இயக்கங்களின் துரோகத்தனமும், ஜே.ஆர்-ராஜீவ் ஒப்பந்தமும், 87 ஒக்ரோபரில் ஆரம்பித்த புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையிலான மோதல்களும், திலீபனின் உண்ணாவிரதமும் உயிர்த் தியாகமும், அன்னையர் முன்னணியினரின் ஊர்வலங்களும், அன்னை பூபதியின்

ஐரோப்பிய
நாடுகளிற்கான
சந்தா

- 25 Sfr

**Postchek Konto :-**
**30-37152-1**
**Manitham**

**Bank Konto:-**
**Schweizerische Kredit**
**Anstalt**
**3001 BERN**

**Nr - 220348-70**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்ணாவிரதமும் உயிர்த் தியாகமும் ......

தொடர்ந்த ஓர் அரசியல் எழுச்சி அலையையும் புலிகள் தமக்கான பிரச்சாரமாகக் குறுக்கிக் கொண்டதோடு ஓய்ந்துபோனது.

தென்னிலங்கையில் J.V.P யின் இந்திய எதிர்ப்பும் பிரச்சாரங்களும் அரசுக்கெதிரான நடவடிக்கைகளும் தீவிரமடைய.....

J.V.P யின் இவ் இந்திய எதிர்ப்புக் கோசங்களை தனதாக்கிக் கொண்டு செயற்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் தந்திரங்களும்....

தென்னிலங்கை மக்களின் இவ் எதிர்ப்பு உணர்வை பிரேமதாசா தனது வளர்ச்சிக்கானதாக ஆக்கிக் கொண்டதன் மூலம் பிசுபிசுக்கச் செய்தமையும்....

'பச்சைப் புலிகள்' என்ற இரகசிய அமைப்பின் மூலம் தென்னிலங்கையில் பலவித படுகொலைகளைச் செய்துவிட்டு JVP யின் (JVP எவ்வித படுகொலையும் செய்யவில்லை என்று அர்த்தமாகாது) தலையில் சுமத்தியமையும்....

பத்திரிகையாளர்களை அடித்தும், துரத்தியும், அவர்களது கமராக்களைப் பறித்தும், பத்திரிகைச் சுதந்திரத்தைத் தடைசெய்வதற்கான முயற்சிகளைத் தொடர்ந்த அதேவேளை, பிரபல பத்திரிகையாளரான றிச்சார்ட் டி சொய்சாவை இரகசியமாகக் கொலை செய்துவிட்டு கடற்கரையில் வீசியமையும்.....

இன்னும் பல அவலங்களும் இப் பத்து வருட காலத்துள் தென்னிலங்கையில் பிரேமதாசாவினாலும், அரசினாலும் தொடரப்பட்ட மறக்கமுடியாத நிகழ்வுகளாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவத் துறைப் பேராசிரியராக இருந்த ராஜினி திரணகம உம் மாணவன் விமலேஸ்வரனும் சமூகத்தின் பக்கம் தமது கடைக்கண் பார்வையைத் திருப்பியமைக்காக புலிகளினால் கொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவங்களும் இக் காலப் பகுதியில்தான் நிகழ்ந்தது.

விஜய குமாரதுங்க, பத்மநாபா போன்றோரினதும் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கத்தினதும் படுகொலைகளும், இன்னும்....

ஜனநாயகத்தை மதித்தவர்களினதும், மிதித்தவர்களினதும் இறப்புக்களும், சிதறடிக்கப்பட்ட கொலைச் சம்பவங்களும் கூட நிகழ்ந்துள்ளன.

இந்திய ஆக்கிரமிப்பாளர்க்கெதிராக விடுதலைப் புலிகளின் விடாப்பிடியான யுத்தம் தொடர்ந்தது. 90 முற்பகுதியில் இந்தியப்படை வெளியேறியது.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் ஒருவித உடன்பாடு காணப்பட்டு, 'அரசியல் நீரோட்டத்தில்' புலிகளும் கலப்பதாக இருந்து.... நிலைமை தலைகீழாகி.....

90 யூனில் மீண்டும் யுத்தம் தொடங்கியது.

85 இல் அப்பாவி சிங்கள மக்கள் மீதான அநுராதபுர பஸ்நிலையப் படுகொலையும், குறுந்தேசிய வாதத்தின் வெளிப்பாடாய்த் தோன்றி காட்டுமிராண்டித்தனமாக அமைந்த காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையும், பரம்பரை பரம்பரையாக யாழ்ப்பாணத்தையே தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்த முஸ்லிம்கள் அகதிகளாக நிர்க்கதியற்றுத் துரத்தப்பட்ட வரலாற்றுத் தலைகுனிவும், முஸ்லிம் கிராமங்கள் நான்கினுள் ஒரேநேரத்தில் புகுந்து மனித வேட்டையாடியமையும் ஆகிய அனைத்தும் இப் பத்தாண்டுக் காலப் பகுதியுள் புலிகளால் தொடரப்பட்ட கொடுமைகளாகும்.

இதற்குப் பழிவாங்கும் போக்காக, 'ஜிகாத்' அமைப்பும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும் (அரசின் ஆதரவுடன்) தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட கொலைவெறிச் செயல்களும் மறக்க முடியாதவையே!

ஜனநாயக சக்திகள், மாற்று இயக்கத்தினர் ஆகியோர் புலிகளினால் 'கைது' செய்யப்படுவதும், சிறைகளில் வதைக்கப்படுவதும், கருத்துச் சுதந்திரம்

**சந்தா விபரம்**

**இலங்கை - இந்தியா**
**இலவசம்**

**தனிப்பிரதி**
**3 Sfr**

**வருட. சந்தா**
**22 Sfr**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுக்கப்படுவதும் தொடரும் நிகழ்வுகளாகும். சென்ற ஆண்டு கைது செய்யப்பட்ட (தீப்பொறி அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான) கேசவன் நிலை என்னவென்று தெரியாது. பெண்நிலைவாதியும், கவிஞருமான 'செல்வி' கைது செய்யப்பட்டதற்கான காரணம் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. இவர்களுடன் 'கைது' செய்யப்பட்ட தில்லை கொல்லப்பட்டுவிட்டார். (அவரது உடைகளை வீட்டாரிடம் கொடுத்துவிட்டு செய்தி சொல்லிவிட்டுப் போனார்கள் புலிகள்)

ஆனையிறவுத் தாக்குதல் , கொப்பேகடுவவும் அவருடன் சேர்ந்த உயர் அதிகாரிகள் மீதான (புலிகள் கூற்றின் பிரகாரம்) கண்ணிவெடித் தாக்குதல், மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதல் என்று தொடர்ந்த புலிகளின் தாக்குதல்கள்.... இன்று கறுப்பு யூலை 10வது ஆண்டின் நினைவாக கொக்கிளாய்–கொக்குத்தொடுவாய்–புல்மோட்டை பகுதிகளில் (சிங்கள குடியேற்றத்திற்குப் பாதுகாப்பாகவும்) அமைந்த இராணுவ முகாமைத் தகர்த்துள்ளது.

தொடர்ச்சியான உணவுத் தட்டுப்பாட்டினால் மக்களின் வாழ்வு பசி, பட்டினியுடன்தான் தொடர்கிறது. போஷாக்கின்மையால், குழந்தைகளும்,சிறுவர்களும், குணப்படுத்தமுடியாத நோய்களினால் பீடிக்கப்பட்டு வருகின்றனர். இது மேலும் அதிகரித்து வருகின்றது. குடாநாட்டைக் கடக்கும் முயற்சியில் கிளாலி 'பொறியில்' மக்களின் உயிர் பணயம் வைக்கப்படுகிறது.

பத்து வருடங்களாகத் தொடரும் இவ் யுத்தத்தினால் பயனேதுமில்லையே என்ற மனோநிலையும் சோர்வும் மேலோங்கி, நிலைகளுக்கேற்ப மக்கள் இசைவாக்கம் அடைந்து போராட்ட உணர்வுகளை இழந்துள்ளனர்.

சர்வதேச நிலைமைகளிலும் எமது போராட்டம் பெற்றிருந்த ஆன்மீக ஆதரவு நியாயமான அளவுக்கு குறைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்க பின்னடைவாகும்.

83 கறுப்பு யூலையுடன் மிதந்து வந்த எழுச்சி நிலைமைகள் வீழ்ச்சியடைந்து நம்பிக்கையிழந்த இன்றைய வாழ்விலும்......

சில தாக்குதல்களின் வெற்றிகள், மக்கள் பரப்பில் (குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் இளைஞர்களிடத்திலும்) மின்னல் வேகத்தில் மறைகின்ற அற்ப மகிழ்ச்சியை உண்டு பண்ணினாலும் இப் பத்து வருட (1983 யூலை– 1993 யூலை) காலத்தை நுனித்து நோக்கின்....

மிஞ்சியதெல்லாம், விரக்தியும் வேதனைகளும் நிறைந்த நம்பிக்கையற்ற வாழ்வியல் நிலைமைகளே !

ΩΩΩ

---

*ஓர் கவனக்குறைவு.... வருந்துகிறோம் !*

சென்ற மனிதம் (இதழ்–22) இன் முன்னுரையில் முதற் பந்தியில் "லலித் அத்துலத் முதலியினதும், பிரேமதாசாவினதும் படுகொலைகளானது இலங்கையில் இதுவரை நிலவிவந்த எச்சசொச்ச பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைக்கு பெரும் அச்சுறுத்தலை விடுத்துச் சென்றுள்ளது." என்று வரவேண்டிய வசனத்தில் 'எச்சசொச்ச' என்ற சொல் விடுபட்டுப் போயுள்ளது. இது ஏதோ இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் நிலவுவதாக அர்த்தப்படுத்திவிடுகிறது என்பதால் இதை நாம் வாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

*– ஆ. குழு*

---

**வாசகர்களே !**

**உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் வரவேற்கிறோம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்த யூலையின் சில நினைவுகள்

http :\\ www. thamizham. net



நாடு சுதந்திரம் அடைந்த பின் சிங்களம் மட்டும் மொழிச் சட்டத்தின் விளைவு தமிழ் சிங்கள மக்களுக்குள் முதலாவது இனக்கலவரமாக 58ம் ஆண்டு தொடங்கியது. இக்கலவரம் தொடக்கம் நடந்தேறிய இனக் கலவரங்கள் (61, 77, 81) யாவும் அரசு, அரசபடைகளால் காலதாமதமாகியும் கட்டுப்படுத்தப்பட்டன. 1983 கலவரம் ஜனாதிபதி ஜே. ஆர், பிரதம மந்திரி பிரேமதாசா, மந்திரிகள், அரசாங்க கட்சி பாராளமன்ற உறுப்பினர்கள் முன்னின்று நடத்தி சிங்கள அரசால் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையென்று உணரும் அளவிற்கு தமிழ்மக்கள் மீது மிருகத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இக் கலவரத்தின் கொடூரம் தமிழ் மக்களின் போராட்ட பாதையில் புதிய திருப்பத்தை தோற்றுவித்து இன்று 10வருட நினைவு கூறுமளவிற்கு வழிவகுத்துள்ளது.

1983 யூலை 23ம் திகதி கலவரம் தொடங்க முன் திருகோணமலை, கிளிவெட்டி, மூதூர் பகுதிகளில் அரசபடைகளின் உதவியுடன் இன வெறியர்களால் தமிழ் மக்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப் பட்டதுடன், படுகாயங்களுக்கும் உட்படுத்தப்பட்டனர். இச் செயல்களைத் தமிழ் பாராளமன்ற அங்கத்தவர்கள் வன்மையாக கண்டித்து அரசுக்கு தெரியப்படுத்தினர். ஆனால் "செவிடன்காதில் சங்கு ஊதியது போல்" அரசின் நடவடிக்கைகள் இருந்ததுடன் சிங்கள குடியேற்றங்கள் மூலம் வட-கிழக்கை பிரிக்க அரசின் உள்நோக்கத்தை நடை முறைப்படுத்துவதற்கு இச் செயல்களுக்கு ஊக்கமளித்தது. தமிழ் மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளை கவனிக்க முடியாத அளவிற்கு பதட்ட நிலை கொண்ட பிரதேசமாக்கப்பட்டது. இப் பிரதேச தமிழ் மக்கள் தங்களால் இயன்றளவு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வடக்கு-கிழக்கில் அரசபடையினர் தமிழ் போராட்டக் குழுக்களினால் கொல்லப்பட்டால் தென்னிலங்கையில் அவ் அரசபடையின் பிரேத ஊர்வலம் அவ்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இன்னலை கொடுத்தோ அல்லது அச்சத்தை ஏற்படுத்தியோ அரசினால் ஊர்வலம் நடத்தப்பட்டது.

1983ம் ஆண்டு யூலை 23 இல் விடுதலைப் புலிகளால் 13 இராணுவம் கொல்லப்பட்டதை சாட்டாக வைத்து சிங்களமக்கள் அரசு மீதுள்ள வெறுப்பை திசை திருப்பவும், தனது அரசை தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்ப சட்டங்களை உருவாக்கவும், முன் கூட்டியே படிப்படியாக வளர்த்துவரப்பட்ட இனவெறி வன்செயல்களை தனது தலைமையில் அரசு 83 கலவரத்தை நடத்தியது. இக்கலவரத்தின் போது வாக்காளர்பட்டியலில் பெறப்பட்டபடி தமிழர்களின் கடைகள், வீடுகள், தொழிற்சாலைகள், உடைமைகள் சூறையாடப்பட்டபின் எரிக்கப்பட்டன. இவ் வேளைகளில் தென்பட்ட தமிழர்கள் வெட்டியோ அல்லது அடித்தோ எரியும் நெருப்புக்குள் எறிந்தோ கொலை செய்யப் பட்டார்கள். தங்கள் உறவினர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதை நேரில் கண்டவர்கள் சித்தபிரமை பிடித்தவர்களாக்கப்பட்டார்கள். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா "போர் எனறால் போர் சமாதானம் என்றால் சமாதானம் " என்பதுடன் துட்டகைமுனுவையும் நினைவு கூறி கலவரத்தை தூண்ட வழி வகுத்தார்.



—) 9



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ்: –

# நீச்சல் குளத்திலும் நிறவெறி கலந்தது

**அன்று செவ்வாய்க்கிழமை
ஆடி 28 ஆம் திகதி.
கோடைகால மம்மல் பொழுது ....**

தன்னுடன் அகதி முகாமில் ஒன்றாக வசிக்கும் சைரோ நாட்டைச் சேர்ந்த இளைஞனுடன் டாக்டரின் ஆலோசனைக்கிணங்க தான் வாழும் கிராமத்து நீச்சல் தடாகத்தில் குளிக்கச் செல்கிறான் Bienvenu. இவன் கொஸ்கோ நாட்டில் இருந்து சுவிஸ் க்கு வந்திருக்கும் ஓர் அகதி.

நீச்சல் தடாக வாசலில் நுழைவுச் சீட்டுக்காக சுவிஸ்காரரிடையே வரிசையில் ஒழுங்காக காத்து நிற்கிறார்கள் இந்த இரு ஆபிரிக்க இளைஞர்களும். Bienvenu முறை வருகிறது. நுழைவுச் சீட்டுக்கான பணத்தைக் கொடுத்த போது நுழைவுச்சீட்டு வழங்கப்படவில்லை. மாறாக வார்த்தைகள் பாய்ந்தன.

" உங்களை உள்ளே அனுமதிக்க முடியாது. இன்று செவ்வாய்க் கிழமை. வியாழன் நண்பகலுக்கு பின்பு மட்டும்தான் நீங்கள் குளிக்க முடியும் என்று தெரியுமல்லவா? உங்களை திருப்பி அனுப்புகிறேன் போங்கள்! "

என்ற தடாகப் பொறுப்பாளர் Arthur Manz (ஆர்த்தூர் மான்ஸ்) இன் வார்த்தைகள் கறுப்பின இளைஞர்களை அதிரவைத்தது. அவமானத்தில் துவண்டனர். விழிகளில் கோபக்கனல் பாய தங்களால் இயலுமானவரை வாதாடினார்கள். ஆயினும் வெள்ளை நிற நீச்சல் தடாகப் பொறுப்பாளர் இவர்களை உள்ளே அனுமதிக்கவேயில்லை. இந்தச் சம்பவம் சூரிச் கன்ரோன் நீமன்றத்துக்கு மேலாக சுவிஸ் பாராளுமன்றம் மட்டும் ஒலித்திருக்கிறது.


கறுப்பின இளைஞர்களை குளிக்க அனுமதிக்காத நீச்சல் தடாக பொறுப்பாளரையும் அந்த கிராமசபைத் தலைவரையும் செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்ட போது.....

" நான் இனவாதி அல்ல. ஆயினும் நான் ஒரு சுவிஸ்காரன். தகாத பழக்கங்களுடைய கறுப்பர்கள் இங்கே தேவையில்லை " என்று நீச்சல் தடாகப் பொறுப்பாளரும்,

" இந்தக் கிராமத்தில் 400 க்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இருப்பினும் அவர்களால் பெரிய பிரச்சனைகள் எழவில்லை. ஆனால் அகதிகளுக்கு எதிராக பிரச்சனைகள் எழவே செய்கிறது. இவற்றை சரியான முறையில் தீர்த்து வைக்கவே விரும்புகிறோம் " என்று கிராமசபைத் தலைவரும் பதிலளித்தார்கள்.

மேற்படி இனவாத நிகழ்வைக் கண்டித்து சூரிச்சில் அகதிகள் ஆதரவு சக்திகளால் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. கன்ரோன் நீதிமன்றமும் அச் சம்பவத்தைக் கண்டித்து தீர்ப்பளித்திருக்கிறது.

கன்ரோன் சூரிச்சில் 3900 குடிசனங்களைக் கொண்ட கிராமம்தான் Bauma. இங்கே 490 வெளிநாட்டவர்கள் வசிக்கிறார்கள். இதில் 70 பேர் அகதிமுகாமில் வசிப்பவர்கள். இந்தக் கிராமத்திலுள்ள நீச்சல் தடாகத்தில் அகதிகள் வியாழக்கிழமைகளில் – அதுவும் நண்பகலுக்குப் பிற்பாடே – குளிக்கலாம் என்று நிர்வாகம் ஏற்கனவே ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இந்த குறிக்கப்பட்ட நேரத்தில்




எவ்வளவு அகதிகளும் குளிக்கலாம் என்கிறது நிர்வாகம். இந்த நிர்வாகத்தில் கிராமசபைத் தலைவர், கிராமத்து டாக்டர் போன்றோர் அங்கம் வகிக்கிறார்கள்.

நீச்சல் தடாக நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் டாக்டரே கொஸ்கோ நாட்டு அகதி Bienvneu க்கு 'நாரிப் பிடிப்பு' சுகயீனத்தைக் காரணம் காட்டி நீந்தும்படி கூறியிருக்கிறார். ஆனால் தடாகப் பொறுப்பாளரோ உள்ளே அனுமதிக்கவில்லை.

" இந்த கறுப்பர்கள் தகாத பழக்கமுடையவர்கள். பெண்கள் குளிக்கும் சோப்பு வகைகளுக்கு கெஞ்சுபவர்கள், கத்துபவர்கள்......... என்று சூழ உள்ள மக்களே குறை கூறுகிறார்கள். இந்த மக்களின் உணர்வுக்கு நாம் மதிப்பளிக்கிறோம். இது இனவாதமாக அர்த்தப்படாது "

என பதிலளித்தது நீச்சல் தடாகத்து நிர்வாகமும் அதன் பொறுப்பாளரும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" இனவாதம் எப்போது தோன்றும்? இந்த நாட்டுப் பிரஜை தான் தலைநிமிர்த்தி சுதந்திரமாக முன்னோக்கி செயல்பட முடியாத போது." என்று விளக்கம் அளித்ததோடு,

"அகதிகள் இங்கே எப்போ குளிப்பார்கள் என்று எமது விருந்தினர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் இதனால் அவர்கள் சுதந்திரமாக குளிக்க முடியும்." என்றும்........

இனவாதத்திற்கு புதிய வர்ணம் தீட்டினார் தடாகப் பொறுப்பாளர் ஆர்த்தூர் மான்ஸ்.

ஆயினும் அகதிமுகாமில்பணிபுரியும் Ossman னின் கருத்து உண்மை நிலமைகளை வெளிச்சமிட்டது.

" இந்த முகாம் தொடங்கிய நாட்களில், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு, இந்த இனவாதப் பிரச்சனை குறைவாகவே இருந்தது. ஆனால் தொடர்ச்சியான போக்கில் இது மிகவும் மோசமாகி விட்டது. இன்று Bienvenu இதை நேரடியாக சந்தித்திருக்கிறான். அவன் கட்டாயம் நீந்தியாக வேண்டும். அவனது நாரி வருத்தத்திற்காக. டாக்டரே அத்தாட்சிப்படுத்தியிருக்கிறார். அந்த டாக்டர் அங்கம் வகிக்கும் நீச்சல் தடாகத்து நிர்வாகமே இதை மறுத்திருக்கிறது " என்றார், மெல்லிய குரலில்!.

சுவிஸ் பாராளுமன்றத்திலோ......

"அகதிகளும் அவர்களது வன்முறைகளும் அதிகரிக்கும் போது ஆர்த்தூர் மான்ஸ் போன்றவர்களின் உணர்வுகளும் செயல்களும் எவ்வாறு தவறாகும் " என்று பிரபல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆதரவுக் குரல் கொடுத்தார்கள்.

மொத்தத்தில் அகதிகளுக்கு எதிராக எரிப்பாகவும் துப்பாக்கிச் சூடாகவும் நேற்று நிகழ்ந்தவை, இன்று நீச்சல் குள அனுமதி மறுப்பாக புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது. இனி.......?

நன்றி- TAGES-ANZEIGER (ZÜRICH)
30.7.93

7 ==)

*83 கலவரத்தில் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் ஒருவகையில் பாதிக்கப்பட்டனர். தமிழ் மக்கள் சொந்த நாட்டில் அரசாங்காத்தால் பாதுகாப்பு அற்றவர்களாக் கப்பட்டனர். மேலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சக சிங்கள கைதினால் சிறைக் கூடங்களை உடைத்து யூலை 25ம் திகதி 35 தமிழ் கைதிகள் பொல்லால் அடித்தும், கூரான இரும்புகளால் குத்தி, குதறி மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டதை அரசு தமிழ் கைதிகள் சிங்கள கைதிகளால் கொல்லப்பட்டனர் எனக்கூறி இவ் இன வெறிச் செயலைக் காப்பாற்றியது. ஆனால் யூலை 27லிலும் அதே சிறைச் சாலையில் 18 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 53 கைதிகள்ளின் சிறைக்கூடம் செல்வடிவங்களையும், பாதுகாவலரையும் கொண்ட பாதுகாப்பானது. இவ் பாதுகாப்பான சிறைக்கூடத்தை எந்தவித சிரமமின்றி திறப்பதற்கும், பொல், கூரான ஆயுதங்கள் கிடைப்பதற்கு யார் வழிவகுத்தார்கள் என்பதை அரசால் உலகுக்கு மறைக்கமுடியாமல் போய்விட்டது.*


*தமிழ் மக்களின் இவ்வளவு இழப்புகளுக்கு எந்தவித பரிகாரமும் ஏற்படுத்தாமல் அரசு தமிழ் மக்களின் பாரளமன்ற பிரநித்துவத்தையும் பறித்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கியது. அரசின் இச்செயல் தமிழ் மக்கள் மீது உலகின் அனுதாப அலை ஓங்க வைத்தது. ஐரோப்பா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் அகதி தஞ்சம் கொடுத்தன.*

*இச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு எதிராக போராட்டம் செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் தம்மை போராட்ட குழுக்களுடன் இணைத்துக் கொண்டனர். இவ் திடீர் இணைவு போராட்ட குழுக்களின் கட்டுமானங்களில் ஆட்டம் கான வழிவகுத்தது. இவ் தற்கால நிகழ்வை ஒழுங்கமைத்து மக்களையும் போராட்டத்தில் இணைத்து செல்வதற்கு முயற்சிக்காமல், தங்கள் குழுக்களின் எண்ணிக்கையில் பிரமிப்பு கொண்டும், அந்நிய நாடுகளின் உதவியில் நம்பிக்கைக் கொண்டும் தம்மை அழித்து கொண்டனர்.*

*83ம் ஆண்டு அனர்த்தங்களை 10வது ஆண்டில் நினைவு கூறுவதுடன் மட்டுமில்லாமல், இவ் பத்து வருடத்தில் அரசின் இனவெறி செயல், பெரும்பான்மை இன கட்சிகளின் இன பிரச்சினைக்கு வைத்த தீர்வுகள், தமிழ் போராட்டக் குழுக்கள் போராட்டபாதையில் நடத்திய, நடத்திக் கொண்டு இருக்கின்ற தில்லு முல்லுகள், கொலைகள், உட்கொலைகள் யாவற்றையும் நினைவு கூறுவதே பூரண நினைவு கூறலாக அமையும்.*

— எம். மணி

* * *





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஊரில் தொடங்கி ......

– ரவிவர்மன்

இரவு
தொலைந்த
நித்திரைக் கலக்கம்
இன்னும்
முகத்தில்
படிந்து போயிருக்க
தெருவில்
இறங்கி நடக்கிறேன்

என் ஊரினை
நினைவுபடுத்தும்
ஒரு மாட்டு வண்டிலும்
இரண்டொரு சைக்கிள்களும்
காற்றில்
கலக்கும்
வாகனங்களின்
இரைச்சல்
என் மூச்சினை விழுங்கும்

வெயில்
சுள்ளென்று
சுட்டது
அந்த நினைவுகளைப்போல்

கொழும்பு
இன்றோடு
ஆறுவருடங்களை
முழுமையாக விழுங்கிவிட்டது.

சனியன்புடிச்சவனே
உன்ர
கூட்டாளிமார்
எவனையாவது
புடிச்சுக்கிடிச்சி
சவூ திக்காவது போடா

பொடிச்சிகளும்
நானும்
பட்டினி கிடந்தே
செத்திடுவம்

கிழிந்த
கொப்பி ஒற்றையில்
கிறுக்கியெழுதிய
அம்மாவின் வரிகள்
என்னைத் துரத்தும்

பழைய
நண்பனொருவனை
இடை நடுவில்
கண்டேன்
நிறையவே பேசினோம்
பாழாய்ப்போன
அந்த நினைவுளை
திரும்பவும்
பகிர்ந்து கொண்டோம்.

பிளேன்ரி
வாங்கிக் கொடுக்கவும்
காசில்லாமல்
விடைபெற்றேன்.

வியர்க்க
விறுவிறுக்க
ஏறி இறங்கி
நடந்து
போய்க்கொண்டிருக்கிறேன்.

நட்டநடு
மத்தியானம்
வயிறும்
உச்சிவெயிலும்
சுள்ளென்றது.

*

www.tamilarangam.net

*லங்காதீப – 6.6.93 இல்*

# தொண்டமானின் பேட்டி



குறிப்பு :
மாகாணசபைத் தேர்தலில் பலரின் கவனத்தை ஈர்த்த ஒன்று தொண்டமானின் மலையக மக்களின் பத்து லட்சம் வாக்குகள். சுயேட்சைக் குழுக்கள் பல இம்முறை தொண்டமானுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்தியும் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பலத்தை மாகாணசபைத் தேர்தலில் தெளிவுபடுத்தி விட்டன.

மாகாணசபைத் தேர்தல் வெற்றியின் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ்.தொண்டமான் லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டி இது !

*? மாகாணசபைத் தேர்தலில் இம்முறை உங்களின் கட்சியின் பலம் குன்றும் என்றும் மலையகத்தில் புதிய அரசியல் சக்திகள் முக்கியத்துவம் பெறும் என்றும் பலர் எதிர்பார்த்தனர். இந் நிலையில் இம்முறை மாகாணசபை தேர்தல் முடிவுகள் பற்றிய உங்கள் கருத்தென்ன ?*

**O மலையகத்தில் யாரிடம் தலைமைத்துவம் உள்ளதோ அவருக்கே மீண்டும் தலைமைத்துவம் சந்தேகத்திற் கிடமில்லாமல் கிடைத்துள்ளது. எங்கள் கட்சியின் சக்தியைப் பற்றி தவறான பிரச்சாரத்தை பத்திரிகைத்துறையே நடத்தியது. நான் நினைக்கின்றேன், இதன்பிறகாவது அப் பத்திரிகை அல்லது நிறுவனம் தொடர்ந்து அவற்றைச் செய்யாது என!**

*? கடந்த தேர்தலை விட இம்முறை மாகாணசபை தேர்தலில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பெரும் வெற்றியை ஈட்டிய ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வருவதற்காக நீங்கள் முன்வைத்த கோரிக்கைகள் என்ன என்று கூறமுடியுமா ?*

**O நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தவித எதிர்பார்ப்போடும் ஆதரவளிக்கவில்லை. இந்த நாட்டின் நிலையான அரசாங்கத்தை அமைக்கக் கூடிய ஒரே ஒரு கட்சி அது என்பதனாலாகும்.**

*? என் கேள்விக்கு நீங்கள் பதிலளிக்கவில்லை. நான் கேட்டேன், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யு. என். பி யை வெற்றியளிக்கச் செய்ய துணைபுரிந்த காரணிகள் எவை என !*

**O நாங்கள் கடந்த 50 வருடங்களாக மலையகத்தில் இயங்கி வரும் கட்சி. எனவே எங்களது ஒத்துழைப்பு யு. என் பி யின் வெற்றிக்கு பாரியளவு துணைபுரிந்துள்ளது.**

**மேல்மாகாண சபையில் எங்கள் கட்சிக்கு மூன்று பேருக்கே இடம் ஒதுக்கினார்கள். இந்த மாகாணசபைக்கு 6 பேருக்கு இடம் தந்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்.**

*? இம்முறை தேர்தலில் மாபெரும் வெற்றி கண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் எண்ணம் உண்டா ?*

www.tamilarangam.net

**O இந்த நேரத்தில் அவற்றைப் பற்றி குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. பொதுத் தேர்தலின் போதே அதனைப் பற்றி யோசிக்கலாம்.**

*? அதாவது உங்கள் கட்சிக்கு மத்திய அல்லது ஊவா மாகாணசபையில் முதலமைச்சர் பதவி பெறவேண்டிய அவசியமில்லை, அப்படித்தானே ?*

**O இல்லை. அப்படி ஒரு விடயத்தை அறிவிக்க இப்போது நான் தயாராயில்லை.**

*? ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மரணத்திற்குப் பின்னால் அதிகாரத்திற்கு வந்துள்ள டி. பி. விஜேதுங்காவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல், நிர்வாக பாரிய மாற்றங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலும் உங்கள் நடவடிக்கைகளிலும் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துமா?*

**O இப்போது செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படும் நிர்வாக மாற்றங்கள் பற்றி எனக்கோ எனது கட்சிக்கோ எதுவும் அறிவிக்கப்படவில்லை. எந்தவித தாக்கமும் எற்பட்டதுமில்லை.**

*? அதாவது நீங்கள் இவ்வளவு காலமும் கொண்டு செல்லும் முறையில் எந்தவித மாற்றத்திற்கும் உட்படாமல் தொடர்ந்து கொண்டு செல்வேன் என்று கூறுகின்றீர்கள்.*

**O ஆம். இவ்வளவு காலமும் கொண்டு செல்லும் வேலைகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது.**

*? யு. என். பி அரசாங்கத்தின் சிரேஷ்ட கபினற் அமைச்சர் என்ற ரீதியில் ரணசிங்க பிரேமதாசவிற்கும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கூறமுடியுமா ?*

**O மறைந்த ஜனாதிபதி பிரேமதாச அவர்களோடு இலங்கையில் ஆட்சி புரிந்த எந்த தலைவரையும் ஒப்பிட முடியாது. சிறந்த ஒரு தலைவர் அவர். இப்போதுள்ள ஜனாதிபதியின் வேலைத் திட்டங்கள் மிகவும் வித்தியாசம். மேலும் இவற்றை இப்போதே கூறிவிட முடியாது. அதைப்பற்றி விமர்சிக்க இன்னும் காலம் கடக்க வேண்டும்.**

*? நீங்கள் பிரேமதாச அவர்களோடு வேலைசெய்ததைப் போல் இப்போதுள்ள ஜனாதிபதியோடு பிரச்சினையில்லாமல் வேலை செய்யலாம் என நினைக்கிறீர்களா ?*

**O ஆம். நான் அப்படி நடக்கும் என நம்புகிறேன். இப்போ நம்மால் உறுதியாகக் கூற முடியாது. எதிர்காலத்தில் நடக்கும் அல்லது நடக்கவிருக்கும் விடயங்கள் எப்படியாயினும், நான் முன்னர் இருந்த அதே நிலையையே தொடர்ந்தும் கடைப்பிடிப்பேன். அவற்றில் வித்தியாசம் இருக்காது.**

*? தோட்டப் புறங்களில் ஆட்சி தொடர்பான பிரச்சனைகளுக்கு நீங்கள் பதில் கூற மிகவும் அச்சம் கொள்வதாக எனக்குப் படுகிறது.*

**O நான் எப்போதும் எதிர்காலத்தை எண்ணியே பதில் கூறுவேன்.**

*? விஜேதுங்காவின் ஆட்சியில் சந்தேகம் இருப்பதனாலேயே நீங்கள் கூறத் தயங்குகிறீர்கள்.*

**O அவரைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. இப்போது ஜனாதிபதியாக இருப்பவர் குறிப்பிட்ட கொள்கையோடு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டவர். மக்களால் அனுமதி பெற்ற அந்தக் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் அவரால் மாற்ற முடியும் என நான் நம்பவில்லை.

விஜேதுங்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர். எனவே அவருக்கு அரசாங்கத்தைக் கொண்டு செல்ல ஐ.தே. கட்சியின் அனுமதியும் ஒத்துழைப்பும் அவசியம்.

அவர் ஏதேனும் பிழையான பாதையில் போவாராயிருந்தால் அன்று அவரை நியமித்த ஐ.தே.க அவருக்கு சரியான பாதையைக் காட்டத் தவறாது. ஆகவே நாம் விஜேதுங்கா பற்றி அச்சம் கொள்ள அவசியமில்லை.

*? எதிர்க்கட்சிகள் எந்தநேரமும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருக்கும் திட்டங்களான ஜனசவிய, ஆடைத் தொழிற்சாலைத் திட்டம் போன்றவற்றைத் தொடர்ந்து கொண்டு செல்வார் என நினைக்கிறீர்களா ?*

**O** அந்தத் திட்டங்கள் ஜனாதிபதி பிரேமதாச தனித்து எடுத்த தீர்மானங்களில்லை. முழு ஆளும் கட்சியும் எடுத்த தீர்மானம். ஆகவே ஜனாதிபதி விஜேதுங்க அவர்களும் அத் திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்துவார். எதிர்க்கட்சிகள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக, எந்நேரமும் நிறுத்துவதற்காக அல்ல மக்கள் எங்களுக்கு அதிகாரத்தை வழங்கியது. அப்படி செய்வதாயிருந்தால் எதிர்க்கட்சிகளுக்கே அதிகாரத்தை தாரைவார்த்து விடலாம். அத் திட்டங்களை நிறுத்துவதனால் ஐ.தே. கட்சிக்கு வசதியாகும் என்று யாரேனும் நினைத்தால் அது தவறு. நான் இன்று நினைக்கிறேன். அத் திட்டங்களை ஐ.தே.க நிறுத்தினால் அதுவே அடுத்த தேர்தலில் அக் கட்சியின் தோல்விக்கு வழிவகுக்கும்.

*? ஜனாதிபதி பிரேமதாசவின் மரணத்தின் பின்னர் பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று, அரசியலமைப்பைத் திருத்த அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கிறது எனக் கூறுகிறது. அதில் ஏதேனும் உண்மை உண்டா? அது உண்மையாயின், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன ?*

**O** நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதை நானும் எனது கட்சியும் தீவிரமாக எதிர்க்கிறோம். சிறுபான்மை கட்சியெனும் ரீதியில் நாங்கள் எல்லோரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அங்கீகரிக்க வேண்டும். இந்த நாட்டில் இனவாதத் தீ பரவ பாராளுமன்ற முறையே காரணமாக இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியதின் பின்னர் குறிப்பிட்ட ஒருவர் ஜனாதிபதியாக வருவதற்கு சிறுபான்மையினரின் வாக்குகளும் அவசியமானது என்ற நிலை உருவானது. இதனால் சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் 'நிறைவேற்று அதிகாரம் கொண்ட' ஜனாதிபதிக்கு ஏற்படுகிறது. இக் காரணங்களினாலேயே சிறுபான்மையினரான நாங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை பாதுகாக்க முற்படுகிறோம்.

*? அப்படியாயின் நிறைவேற்று அதிகார முறையை நீக்க பாராளுமன்றத்திற்கு யோசனை கொண்டு வரப்பட்டால் நீங்கள் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன ?*

**O** ஆட்சேபனை இல்லை. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன்.

*? தற்போதைய அரசாங்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க முயற்சிப்பதாக உங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதா ?*

**O** டி. பி. விஜேதுங்கா அவர்களின் தலைமையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஜனாதிபதி முறையை மாற்றுவது தொடர்பாக ஆலோசிக்க இடமுண்டு. இருந்தாலும் இம் முறையினை மாற்ற எந்த ஒரு தனிநபராலும் முடிவு செய்ய முடியாது. அது தொடர்பாக ஐ.தே.க தன்னுடன் இணைந்திருக்கின்ற ஏனைய கட்சிகளினதும் அனுமதியைப் பெறவேண்டும்.

*? அது தொடர்பாக ஏனைய கட்சிகளின் அனுமதி கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா ?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

O அதற்கு அனுமதி கிடைக்கும் என்று நம்புவது கடினம்.

*? கடந்த சில நாட்களுக்கு முன் பிரதம மந்திரிக்கான பதவிப் போட்டியில் உங்கள் பெயரும் இருப்பதாக பேசப்பட்டது.*

O இப்போதுள்ள நிலையிலேயே என்னால் என் மக்களுக்கு சேவை செய்வது கடினமானதாக உள்ளது. எனவே பிரதமர் பதவியில் இருந்து கொண்டு என் மக்களுக்கு சேவை செய்வது என்பது என்னால் முடியாமல் போய்விடலாம். பிரதம மந்திரி பதவியிலிருந்து செய்வதை விட குறிப்பிட்ட பொறுப்புக்களோடு எனது கடமையை செய்ய முடியும் என்பதால் நான் அந்தப் போட்டியில் சம்பந்தப்படவில்லை.

*? நீங்கள் கூற வருவது, இந்த நாட்டில் பிரதமர் பதவியிலிருந்து கொண்டு ஒருவர் தனது சேவையை செய்யமுடியாமல் போகும் என்பதையா ?*

O நான் அப்படி கூற வரவில்லை. யாரும் அதனை எப்படியும் கருதிக் கொள்ளலாம்.

*? ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டதைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?*

O அந் நியமனம் தொடர்பாக மகிழ்ச்சியடைகிறேன்.

*? 'முன்னாள் ஜனாதிபதி' ஜே. ஆர். ஜெயவர்த்தனா திரையின் பின்னாலிருந்து கொண்டு ஆட்சி நடத்துகிறார் என்று பேசப்படுவதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள் ?*

O அவர் ஓய்வில் இருக்கும் ஒரு மனிதர். ஆகவே திரையின் பின்னாலிருந்து கொண்டோ அல்லது முன்னால் வந்தோ ஆட்சி புரியும் அவசியம் ஜே.ஆர். ஜெவர்த்தனாவுக்கு இல்லை என நம்புகிறேன்.

*? 'முன்னாள் ஜனாதிபதியால்' (ஜே. ஆர் இனால்) நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள் மீண்டும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அவர்களால் நியமிக்கப்பட்டு வருவது குறித்து ஐ. தே. கட்சியின் பிரேமதாசா பிரிவினர் அதிருப்தியில் இருக்கின்றார்கள் என்ற செய்தியைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?*

O ஜனாதிபதி பிரேமதாச இப்போது இங்கில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சியில் பிரேமதாச பிரிவினரும் இல்லை. இப்போது செய்யப்பட்டு வரும் மாற்றங்கள் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில் நடப்பது. இன்று விஜேதுங்க முறை வந்துள்ளது. ஆகவே விஜேதுங்க அவர்கள் அவரின் முறைக்கிணங்க மாற்றங்களைக் கொண்டு வருகிறார்.

*? தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்த உடனேயே அமைச்சரவையில் பேசும்போது அமைச்சர்களுக்கு அவர்களின் கடமையைச் செய்ய பூரன அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறினார். முன்னாள் ஜனாதிபதியின் (பிரேமதாசா வின்) கீழ் இவ் வகையான அதிகாரம் உங்களுக்கு இருக்கவில்லையா ?*

O முன்னாள் ஜனாதிபதியின் கீழ் எனக்கு அவசியமான அதிகாரம் இருந்தது. எனினும் ஏனையோருக்கு எப்படி என்று தெரியாது. அதுபற்றி ஏனைய அமைச்சர்களிடம்தான் வினாவ வேண்டும்.

*? LTTE அமைப்புடன் மிகவும் நெருங்கிய அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி கொலையில் அவர்களின் தொடர்பு உண்டு என்று நீங்கள் நம்புகிறீர்களா ?*

O அது தொடர்பாக இப்போது விசாரணைகள் நடந்து வருகின்றன. எனவே நான் ஒன்றும் கூறத்தயாரயில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை :**

# தரு

இன்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்னால் எனக்கு அவள் அறிமுகமானாள். ஒரு நண்பன் அவளை அறிமுகப்படுத்தி வைத்தான். இராஜ கம்பீரமான தோற்றத்தில் பெண்மையின் வசீகரங்களுடன் அவள். ஒரு பிடிவாதமான, எடுத்தெறிந்த பேச்சு. எவரையும் என்னால் அடிமைகொள்ள முடியும்– பணிய வைக்க முடியும் என்ற வீம்பு.

எனக்கு அவள் ஒரு சுவாரஸ்சியமான பொருளானாள். ஓர் இனிய சவாலாக தோன்றினாள். அவளை வெற்றிகொள்ளும் முயற்சியே அக் காலத்தில் எனது வாழ்வாயிற்று. அவளை அவள் போக்கிலேயே இயங்க விட்டு பின் கட்டி இழுப்பதாய் – நூல் மாட்டிய பம்பரம் போல் ஓடவிட்டு திடீரென இழுத்து நிறுத்துவதுமாய்..... நூலுடன் சேர்ந்து சுழன்று தானாக நிதானமடைந்து நிற்பதாய்..... ஆரம்ப காலங்கள் இப்படி....... இப்படியே..........

அந்தக் காலங்கள் சந்தோஷமான காலங்கள்தான்.

அதற்கு முந்திய வெட்ட வெளிப் பாலையில் அலைந்த காலங்கள். ஒரு தருவைத் தேடி, ஒரு இலையைத் தேடி.ஒரு தனிரைத் தேடி, ஒரு மலரைத்தேடி அலைந்த காலங்கள். ஓடு, ஓடு, ஓடென விரட்டும் பாலை வெளியின் கொடுமை. ஓடி, ஓடி, வியர்த்துக் களைத்துச் சோர்ந்து... மீண்டும் ஓடி.... மீண்டும் களைத்து.... மீண்டும்... மீண்டும்.......

++++++++++++++++++++++++++++

**4. 5. 1990 திசை யில் வெளிவந்த இக் கதை இங்கு மறுபிரசுரமாகிறது.**

++++++++++++++++++++++++++++

அப்போதுதான் ஒரு காட்டு மலராய், ஒரு முரட்டு கவிதையாய், ஒரு புன்னகையாய் அவள் அறிமுகமானாள்.



காட்டு பாலைவெளி அந்தகாரத்தில் அவளும் அலைந்திருக்க வேண்டும். அந்தச் சந்திப்பை ஒரு தருவின் நிழலாய் நான் நினைத்தது போலவே அவளும் நினைத்திருக்க வேண்டும். அது எங்கள் களைப்பைப் போக்கும். வசந்தத்தை உணர வைக்கும். கானம் இசைக்க வைக்கும். கைகோர்த்து உலாவி, கதைத்து, சிரித்து, சல்லாபித்து... 'வாழ்வே இன்பமானது... வாழ்வே இன்பமானது' என்று பிரகடனம் செய்ய வைக்கும்.
என்ன....? என்ன....? என்ன!

அந்தக் காட்டு மனிதன் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தான். வேணவாக்கொண்ட ஒரு பயங்கர மிருகத்தின் பார்வையாய் அவன் பார்வை எனக்குப் பட்டது. ஒரு பழகிய மிருகத்தின் குழைவும் காணப்பட்டது போல இருந்தது. எதுவித கூச்சநாச்சமும் இல்லாமல் எதுவித பயபக்தியும் இல்லாமல் அந்தக் காட்டு மனிதன் எங்கள் தருவின் கீழ் இளைப்பாறிக் கொண்டிருந்தான், எங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். இங்கிதமில்லாத காட்டுமனிதன்.

"ப்ரேமி அவனைப் பார்த்தாயா? எங்களையே வெறித்துக் கொண்டு...."

"இல்லை இல்லை அவன் பார்வை இயற்கையிலேயே அப்படித்தான்"

"ஏற்கெனவே அவனை நீ அறிவாயா?

"அலைந்து திரிந்த காட்டு வாழ்கையில் அவனை அவ்வப்போது எதிர்ப்பட்டதுண்டு"

ப்ரேமி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.அவள் பார்வையில் ஒரு வாத்சல்யத்தின் குளுமை இருந்தது போலப் பட்டது.

அவன் அப்படியே வெறித்துக் கொண்டிருந்தான்.

* * *

அந்தத் தரு எங்களுக்கேயான தருவாயிற்று. தருவின் நிழல் எப்போதும் குளுமையாகத்தான் இருந்தது. வெளியே இப்போதும் ஓட ஓட விரட்டும் அந்தப் பாலைவெளியின் கொடுமை தொடரலாம். எத்தனையோ நெஞ்சங்கள் தருவின் குளிர்மைக்காய் ஏங்கலாம், அலைந்து அலைந்து உருக்குலையலாம், வாழ்வுப் பாதையில் ஒருபோதும் தருவின் நிலையைக் காணாது மாய்ந்து போகலாம். கொடுமை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால், நான் அதையெல்லாம் மறந்தாயிற்று! தருவும் குளிர் நிழலும், நிலவும் இனிய கானமும், வசந்தத் தென்றலும், அழகிய காலையும்... மாலையும், நானும் ப்ரேமியுமாய்....

ஆனால், அந்த காட்டு மனிதனின் வெறித்த பார்வையும் அவனிலான ப்ரேமியின் வாத்சல்யமும்........

குளிர் தருவின் கீழும் பாலையின் வெப்பக் காற்று புகுந்தது போல இருந்தது. என்னால் தாங்க முடியாது போயிற்று. பயமும், கிலேசமும், வெறுப்பும் மேலோங்கிற்று. அந்தக் காட்டு மனிதனை தருவின்

நிழலினின்றும் துரத்தினால், எல்லாம் பழையபடியே ஆகலாம் போலிருந்தது. ஆனால் அவன் அசையாத பிடிவாதத்துடன் அப்படியே இருப்பான் போலிருந்தது. அவன்மேல் ப்ரேமி காட்டும் வாத்சல்யம் தயக்கத்தைத் தந்தது.

என்றாலும் ஒருநாள் கேட்டேன்.

"ப்ரேமி இங்கேயும் இந்தத் தருவின் கீழும் பாலை வெளியின் வெக்கையை உன்னால் உணர முடியவில்லையா?"

"இல்லையே" என்றாள் வெறிதாய்...

"நான் உணர்கிறேன். என்னால் தாங்க முடியாது போல இருக்கிறது. அந்தக் காட்டு மனிதன் இங்கிருப்பதால் தான் இப்படி நேரிடுகிறது போலும்"

"இல்லையில்லை, எல்லாம் உங்கள் மனப்பிரமை" என்றாள்

என்றாலும் அந்த வெக்கையை என்னால் உணர முடிந்தது. மேலும் மேலும் உக்கிரமாக....

* * *

காட்டு மனிதன் தருவின் நிழலில் மேலும் கூடிய சுயாதீனத்துடன் உலாவத் தொடங்கினான். தன்மீதுள்ள ப்ரேமியின் வாத்சல்யம் அவனுக்கு புரிந்திருக்க வேண்டும். அவன் கூடிய தைரியத்துடன் தருவின் நிழலில் அத்துமீறிப் பிரவேசித்துக் கொண்டிருந்தான். ப்ரேமியின் வாத்சல்யம் கலந்த பார்வைகள்..... புன்னகைகள், நிமிர்ந்தால்... திரும்பினால்... அசைந்தால்... அதற்காவே காத்திருப்பவனாய் – எங்கோ வெறிப்பதாய் பம்மாத்துப் பண்ணிக் கொண்டு, தலையை மடக்கிப் படுத்துக் கொண்டு... இடையிடையே பாட்டுகளும் பாடிக் கொண்டு...

"ப்ரேமி என்னால் இந்த வெக்கையைத் தாங்க முடியவில்லை. நான் அந்தக் காட்டு மனிதனை இந்த இடத்தை விட்டே துரத்தப் போகிறேன்."

"பாவம் அப்படி செய்யாதீர்கள். அந்தரித்த சீவன் இந்த நிழலே தஞ்சமென வந்திருக்கிறது. இன்னும் நாலைந்து மாதத்தில் இவ்வளவு நாளும் அலைந்த அதன் களைப்பு சற்றே தீர்ந்த பிறகு, வேண்டுமென்றால்...."

எனக்கு எரிச்சலாக இருந்தது. காட்டு மனிதன் சுயாதீனமாவே இயங்கினான். ப்ரேமி மேலேயே என் கட்டுப்பாடு கூடிற்று. நிமிரக்கூடாது, திரும்பக் கூடாது, அசையக் கூடாது,

கூர்மையாகப் பார்க்கக் கூடாது, புன்னகைக்கக் கூடாது.

"எப்படி...? எப்படி என் அடக்கு முறை"

அவளை சந்தித்த தொடக்க காலத்தைப் போலவே, இப்போதும் என்னால் அவளையே சுற்றிக் கொண்டு திரிய முடியுமா? நானில்லாத வேளைகளில்அவள் நிமிருவாள், திரும்புவாள், அசைவாள், பார்ப்பாள். அந்த வேதனையிலும் இந்த வேதனை பரவாயில்லைப் போலப்பட்டது. நானிருக்கும் போதே நான் இல்லை என நினைத்துக் கொண்டு நிமிர, திரும்ப, அசைய, புன்னகைக்க....

அது மகா மகா வேதனையாயிற்று.

* * *

காட்டு மனிதன் என்னுடனேயே மோதத் தொடங்கினான். அவ்வப்போது சிறு சிறு மோதல்கள் நடந்தன. நான் வலிமை பொருந்தியவனாகவும், தருவின் நிழலிலே கூடிய காலம் இளைப்பாறித் தென்பு பெற்றவனாயும், தருவிற்கும் – நிழலுக்கும் உரிமை பூண்டவனாயிருந்தும், அவ்வப்போது அவன் கையும் மேலோங்கியதுண்டு. மாறாகத் தளர்ந்த காலங்களில் அவன் என்னுடனேயே குழைந்து பேசி மன்றாடியதுண்டு.

ஒருநாள் ஒரு சிறு மோதலின் பின் அவன் திடீரென உரத்த குரலில் பிரகடனம் செய்தான்.

"இந்த தருவின் நிழல் உனக்கு மட்டும் உரிமையானதல்ல, இந்தத் தருவின் நிலம் உனக்கு மட்டும் சொந்தமானதுமல்ல."

என்னால் என் காதுகளையே நம்ப முடியவில்லை. என் ப்ரேமியும் – என்னுடன் தருவிற்கும், நிழலிற்கும், நிலத்திற்கும் உரிமைபூண்ட என் ப்ரேமியும் – அதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் நின்றாள்.

அன்று இரவில், அமைதியற்ற உறக்கத்தின் பின் – திடீரென விழிப்பு வந்த அதிகாலைப் பொழுதில், நான் என்னையே சுயவிசாரணை செய்யத் தொடங்கினேன். "நான் யார்? காட்டு மனிதன் யார்? தருவின் நிழலிற்கும், நிலத்திற்கும் உரிமையானவன் யார்? எப்படிக் காட்டுமனிதனால் அந்தப் பிரகடனத்தை விட முடிந்தது...? "

' பேசாமல் செத்துத் தொலை! '

என்னால் சாகமுடியவில்லை.

பாலை வெளியின் வெக்கை தாங்க முடியாத அளவிற்கு மோசமாயிற்று!

சொல்லில் அடங்காத வேதனையோடு நான் உழன்று கொண்டு.....

தருவின் நிழலே நரகமாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* * *

*இப்போதெல்லாம் பாலைவெளிக்கும், தருவின் நிழலிற்கும் வித்தியாசமே இல்லை என்றாற்போல் ஆகிவிட்டது! பாலைவெளியிலும் பார்க்க தருவின் நிழலே கொடுமையானது என்று கூடப் பட்டது. அந்தத் தருவின் நிழலைவிட்டு ஓடிவிட்டால் அந்த வேதனை– வெக்கை குறையுமென்று கூடப் பட்டது.*

*ஆனால் ஓடமுடியவில்லை. "இந்த வேதனைகளிலேயே உழன்று, உழன்று வாழ்ந்துமுடி" என்று சபிக்கப்பட்டே பிறந்தவனாக, அவற்றை மேன்மேலும் சுமந்து கொண்டு....*

*இடையிடையே வசந்தத்தின் வர்ணங்கள், இடையிடையே கண்ணீர்ப் பெருமூச்சுக்கள், இடையிடையே மோதல்கள், இடையிடையே சமாதானங்கள், குமைச்சல்கள், அசூசைகள், அற்ப சந்தோஷங்கள் என்றவாறு........*

*அந்தரித்த சீவனாக வந்த காட்டு மனிதன் இப்போது அங்கேயே காலூன்றி விட்டான். ஆலோசனை, அபிப்பிராயங்கள் சொல்லத் தொடங்கினான். கர்வம் பிடித்த ஒரு வேலைக்காரனைப் போலவும் செயற்பட்டான். எடுத்தெறிந்து பேசினான். "நீ யார், எங்களைக் கேட்க..." என்றவாறு நடந்து கொண்டான்.*

*ஒருநாள் கேட்டேன், கடுமையான தொனியில் விடாப்பிடியாகத் தான் கேட்டேன். அப்போது ப்ரேமியும் அங்கு நின்று கொண்டிருந்தாள்.*

*அவன் சொன்னான். மெதுமையான குரலில் தான் சொன்னான். "உனக்கு நான் துரோகம் செய்யப் போவதில்லை"*

*உலகம் எல்லாமே அப்படியே ஸ்தம்பித்து நின்றாற் போன்ற மௌனம்.... மௌனம்... பெரிதாய் கனக்கும் மௌனம்! ஆடாது, அசையாது நிற்கும் ப்ரேமியைப் பார்த்தேன். மௌனம்... மௌனம்... மௌனம்.*

*தரு பெயரளவிலேயே தருவாயிற்று. எல்லாமே கொதிக்கும், அனல் கக்கும் பாலைவெளியாயிற்று.*

* * *

*இந்தக் கனவு எனக்குக் கற்றுத்தந்த படிப்பினைகள் மூன்று.*

** கெக்கட்டமிட்டுச் சிரிப்பவன் விக்கி விக்கி பெருங் குரலெடுத்து அழுவது மாதிரி, அதிகமான இன்பங்களை அனுபவிப்பவன், அதிகமான துன்பங்களையும் அனுபவிக்கத் தான் வேண்டும்.*

** எந்தச் சுதந்திரமான உணர்ச்சியையும் பயங்கரமான அடக்குமுறைச் சட்டங்களால் அழித்துவிட முடியாது.*

** வற்றுப் போன்று இயல்பாகவே கிளரும் அன்பை வற்புறுத்தல்களினால் ஏற்படுத்தவும் முடியாது, அடக்கிவிடவும் முடியாது.'*

*ஆனால் , மகா சனங்களே மேலும் ஒன்று சொல்வேன். வாழ்வியக்கமே இன்ப நாட்டமாகும் போது, நீங்கள் வேதனைகளை– மகா கொடிய பயங்கரமான வேதனைகளைச் சுமக்கத்தான் வேண்டும்.*

*இந்தச் சிலுவையிலிருந்து யாரும் மீட்சி பெற்றுவிட முடியாது.*

ooooooooo **சம்யுக்தா** ooooooooo

---

14 ==)

*? ஜனாதிபதி கொலைக்கான காரணம் புலிகளே என்று உறுதி செய்யப்பட்டால், பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதானது இன்னும் நாள் கடத்தப்படுமே ??*

**O எனக்குத் தெரியாது, ஜனாதிபதியை கொலை செய்தவர் யார் என்பது. இருந்தாலும், மாகாணசபை தேர்தலின் முடிவில் விரைவில் வடக்கு கிழக்கு பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவருவது சம்பந்தமாக நானும் முன்னாள் ஜனாதிபதியும் கலந்துரையாடியிருந்தோம். தற்போதைய அரசாங்கமும் ஒரு நிலைக்குப் பின் முன்னாள் ஜனாதிபதி விட்ட இடத்திலிருந்து தொடருவார்கள் என நான் நம்புகிறேன். ☐**

**தமிழில்– ஆதுரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிக்கரக்குவா

# புரட்சியின் பின் ......

இக் கட்டுரையின் முதல் பகுதி சென்ற இதழில் (மனிதம்-22) வெளிவந்திருந்தது.
Race & Class (1991) புத்தகத்தில் Hazel Smith எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. Hazel Smith, University of Kent இன் லண்டன் சர்வதேச தொடர்பு மையம் (London International Relations Centre) இல் விரிவுரையாளராக இருப்பவர்.
நிக்கரக்குவா புரட்சியின் பின் போர்க் கொடுமைகளினூடு புரட்சியின் பெறுபேறுகளைப் பாதுகாக்க FSLN எடுத்த ராஜதந்திர நடவடிக்கைகளையும் அதன் விளைவுகளையும் இக் கட்டுரை தனது உள்ளடக்கமாக்கியிருக்கிறது.

## அமைதிக்கான முயற்சிகள்

**1982** இல் நிக்கரகுவா–கொண்டூராஸ் எல்லைப் பிரச்சினைகள் உக்கிரமடைந்திருந்த காலம். இது அண்டைய நாடுகளில் பதட்ட நிலையை ஏற்படுத்தலாம் என்பதால் இதற்கான ஒரு தீர்வைக் காண மெக்சிக்கோ வெனிசூலா அதிபர்கள் முயன்றனர். நிக்கரகுவா பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக அறிவித்தது. கொண்டூராசும் (Honduras) அமெரிக்காவும் இந்தப் பேச்சுவார்த்தையை நிராகரித்தன.

1983 ஜனவரியில் வெனிசூலாவும் மெக்சிக்கோவும் பனாமாவையும், கொலம்பியாவையும் தம்முடன் இணைத்துக் கொண்டது. இவை 'கொன்ராடோரா' (Contadora) என்ற அமைப்பாக அணி சேர்ந்ததுடன் 21 அம்சங்கள் அடங்கிய சமாதானத் திட்டமொன்றை முன்வைத்தன. இந்த திட்டத்தை தயாரிப்பதில் மத்திய அமெரிக்க நாடுகள் அனைத்தினதும் ஆலோசனைகளை இவ் அமைப்பு கருத்தில் கொண்டது.

'கொன்ராடோரா' வின் முக்கிய கோரிக்கைகளாக,

1. வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களை மத்திய அமெரிக்காவிலிருந்து உடனடியாக வெளியேற்றுவது.
2. ஆயுதமேந்திய கூலிப்படைகளுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்துவது.
3. பதட்ட நிலையை ஏற்படுத்தக் கூடிய எல்லைப் பிராந்திய இராணுவ நடவடிக்கைகளை இல்லாமல் செய்வது

என்பன வரைவு செய்யப்பட்டன.

ஒருபுறம் வத்தீன் அமெரிக்கா சமாதானத்துக்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மறுபுறம் போருக்கான முஸ்தீபுகளை அமெரிக்கா செய்து கொண்டிருந்தது. 1983 ஒக்டோபர் 25 இல் கிரனடா ஆக்கிரமிக்கப்பட்டது. பாரிய அமெரிக்க கடற்படை "பயிற்சி" நடவடிக்கைகள் நிக்கரகுவாவை அண்மித்த கரீபியன் கடலில் நடாத்தப்பட்து. 1983–84 களில் கொண்டூராசில் (Honduras) அமெரிக்க இராணுவ 'ஒத்திகைகள்' பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டது. 83 நவம்பரில் அமெரிக்க காங்கிரஸ் 24 மில்லியன் மேலதிக உதவியாக கொன்ராஸ் (Contras) க்கு வழங்க அனுமதி அளித்தது. அமெரிக்காவின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை நிக்கரகுவா அரசு இராணுவ, அரசியல், ராஜதந்திர ரீதியில் முகங்கொடுத்தது. அத்துடன் இரண்டு வருட கட்டாய இராணுவ சேவையை 1983 இல் கொண்டு வந்தது. 1985 இல் நடக்கவிருந்த பொதுத் தேர்தலை 1984 நவம்பரில் நடத்த முடிவு செய்தது.

1984 ஏப்ரலில் அமெரிக்காவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் நிக்கரகுவா வழக்குத் தொடர்ந்தது. மே மாதம் 10 ம் தேதி இந் நீதிமன்றம் அமெரிக்காவின் செயலை – நிக்கரகுவாவின் துறைமுகங்களில் கண்ணிவெடிகளை பரப்பியதை– உடனடியாக நிறுத்தும்படி கட்டளையிட்டது. அமெரிக்காவின் இந் நடவடிக்கையை பிரிட்டன் உட்பட அதன் நெருங்கிய கூட்டாளிகளும் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1984 நவம்பரில் நடக்க இருந்த அமெரிக்க பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு ராஜதந்திர ரீதியில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த அமெரிக்க அரசு முயற்சித்தது. நிக்கரகுவாவுடனான பேச்சுவார்த்தையை மெக்சிக்கோவில் நடாத்த தயாராக இருப்பதாக அறிவித்தது.

ஆனால் ரேகனின் வெற்றிக்குப் பின்போ அமெரிக்கா தனது பேச்சுக்களை தன்னிச்சையாக கைவிட்டதுடன் சன்டீனிஸ்ராஸ் மூர்க்கத்தனமான பிடிவாதமுடையவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் அறிவித்தது. அத்துடன் அமெரிக்காவுக்கும் நிக்கரகுவாவுக்கும் இடையிலான (இரு நாட்டு) ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் கொன்ராடோரா (Cotadora) வின் மூலமான பன்னாட்டு ஒப்பந்தமொன்று ஏற்படுவதற்கு தாங்கள் 'குந்தகம்' விளைவிக்க விரும்பவில்லை என்று ஒரு கருத்தையும் வெளியிட்டது.

கொன்ராடோரா (Contradora) குழு மீளாய்வு செய்யப்பட்ட தமது சமாதான உடன்படிக்கையை 1984 செப்டம்பரில் முன்வைத்தது. இதில் சம்பந்தப்பட்ட 5 பிராந்திய நாடுகளில், நிக்கரகுவாதான் சமாதானத் திட்ட அம்சங்கள் தொடர்பாக மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது. அப்படியிருந்தும் இவ் ஒப்பந்தத்தில் நிக்கரகுவாவே முதலில் கைச்சாத்திட்டது. இந்த எதிர்பாராத தீர்மானம் ராஜதந்திர ரீதியாக நிக்கரகுவாவுக்கு எதிராக போராட வேண்டிய நிலைக்கு அமெரிக்காவைத் தள்ளியது.

கொண்டூராஸ் அரசு தனது தலைமையில் —நிக்கரகுவா தவிர— மற்றைய மத்திய அமெரிக்க நாடுகளின் மாநாடொன்றை நடாத்தியது. இம் மாநாட்டில் கொண்டூராஸ், கோஸ்ராறீகா, எல்சல்வடோர் ஆகிய மூன்று நாடுகளும் தமக்குள் உடன்பாடான ஒரு ஒப்பந்தத்தை முன்வைத்திருந்தன. இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் கொன்ராடோரா (Contadora) வின் நோக்கங்கள் நிலைகுலைந்திருக்கும். அத்துடன் அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை லத்தீன் அமெரிக்காவில் தொடரவும், தனது இராணுவ தளங்களை நிலைத்திருக்கச் செய்யவும் சாதகமாக அமைந்திருக்கும்.

அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் அறிக்கை யொன்றில் தாங்கள் கொன்ராடோரா (Contadora) இன் 2 வது கட்ட நடவடிக்கையை தடுத்து நிறுத்தியிருப்பதாக குறிப்பிட்டிருந்த விடயம் காலப்போக்கில் வெளியே கசிந்தது.

1985 மே மாதம் நிக்கரகுவா அமெரிக்காவுடனான (கைவிடப்பட்ட) பேச்சுவார்த்தையை மீண்டும் தொடரும் முயற்சியில் ஈடுபட்டது. அமெரிக்கா இதற்கு உடன்படவில்லை. யூன், யூலை மாதங்களில் FSLN இன் உதவித் தலைவர் சேர்ஜியோ ரமீரஸ் (Sergio Ramirez) அமைதிப் பேச்சுக்களை தீவிரப்படுத்த லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். ஆர்ஜன்டீனா, பிரேசில், பெரு, உருகுவே என்பன தமது ஆதரவை கொன்ராடோராக்கு (Contadora) வழங்கு வதென உறுதியளித்தன. கொன்ராடோரா நாடுகளும் இந்த நாலு நாடுகளுமாக சேர்ந்து இப்போ எட்டு நாடுகளும் தம்மை 'லீமாக் குழு' (Lima Group) என அழைத்துக் கொண்டன. இந்தக் குழுவுக்குள் தனது சார்பு நாடுகளான ஈக்குவடோர், டொமினிக்கன் குடியரசுகளையும் நுழைக்க அமெரிக்கா எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

மூன்றாவது திருத்தப்பட்ட கொன்ராடோரா ஒப்பந்தம் 1985 இல் முன்வைக்கப்பட்டது. ஆனால் நிக்கரகுவா இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கொன்ராடோராவின் ஒப்பந்தம் நடைமுறையில் இருந்து வந்த அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் எதனையும் கட்டுப்படுத்தாதுடன், கொன்ராஸ் (Contras) கூலிப்படைகளுக்கான அமெரிக்காவின் உதவி அதே வருடத்தில் 100 மில்லியனாக உயர்ந்ததையும் தடுத்து நிறுத்த முடியாமலும் போய்விட்டதே நிக்கரகுவாவின் இந் நிலைப்பாட்டுக்கு காரணமாகும்.

1985 டிசம்பரில் மீண்டும் நிக்கரகுவா சமாதானத் திட்டத்துக்கான பிரேரணையை கொன்ராடோரா வின் முன் கொண்டுவந்தது. இதில் அமெரிக்காவுடனான பேச்சு வார்த்தையை நடாத்த மீண்டும் அழைப்பது என்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கிடையிலான பொதுவான சமாதானத் திட்டமொன்று உருவாக்கப்பட்டு அவை 1986 இல் நடக்கவிருந்த மத்திய அமெரிக்க நாட்டு அதிபர்களின் மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தது.

எட்டு நாடுகளின் குழு (லீமா) இந்தப் பிரேரணைக்கு சார்பாக அறிக்கையொன்றை வெளியிட்டது. இந்தப் பிரேரணையை மத்திய அமெரிக்க நாட்டு அதிபர்களும் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறே மேற்கு ஐரோப்பிய நாட்டின் பெரிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதனை ஆமோதித்தனர். ஆனால் அமெரிக்கா இதற்கு உடன்பட மறுத்ததுடன் முதலில் சன்டீனிஸ்ராஸ், கொன்ராஸ் உடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதன் பின்பே அமெரிக்கா FSLN உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் எனவும் அறிவித்தது.

லத்தீன் அமெரிக்காவின் சமாதானத்திற்கான முயற்சி 1986 முழுவதும் நடந்தேறியது. 1986 நவம்பரில் கொன்ராடோராவின் சமாதான முயற்சிக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் ஐநா சபையின் செயலாளரும் மற்றும் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பும் (Organisation of American States -OAS) தமது ஆதரவை வழங்கியிருந்தனர். 1986 யூன் 27 இல் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பும் வெளிவந்தது. அமெரிக்கா சர்வதேச சட்டங்களை உதாசீனப்படுத்தி நிக்கரகுவாவிற்கு எதிரான இராணுவ, பொருளாதார ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டது குற்றமென நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இவையெல்லாம் அமெரிக்காவை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தியது.

நிக்கரகுவா தொடர்ந்தும் ராஜதந்திர ரீதியில் சமாதான முயற்சிகளை தொடர்ந்து கொண்டே இருந்தது. 1986 இல் பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய டாயனியல் ஒட்டேகா அமெரிக்கா—நிக்கரகுவா இடையிலான பேச்சுவார்த்தை களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் எனவும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். அமெரிக்காவின் கூட்டாளிகள் அமெரிக்காவை கைவிட்ட நிலையில் பாதுகாப்புச் சபையின் வாக்கெடுப்பு நடந்தது. இதன்போது 15 அங்கத்தவர்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11 அங்கத்தவர்கள் நிக்கரகுவாவிற்கு சார்பாக வாக்களித்தனர். பிரிட்டன், பிரான்ஸ், தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் வாக்களிப்பில் பங்கு கொள்ளவில்லை. இந் நிலையில் இப் பிரேரணையைத் தடுக்க அமெரிக்கா தனது 'வீற்றோ' (Veto) அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டது.

இதேவேளை அமெரிக்காவில் ஜெசி ஜக்சனை (Jesse Jackson) ஒட்டேகா சந்தித்தார். இவர்கள் இருவரும் எட்டு அம்சங்கள் அடங்கிய சமாதானத் திட்டமொன்றில் உடன்பாடு கண்டனர். றேகனை நிக்கரகுவாவிற்கு விஜயம் செய்யும்படியும் கோரினர். அதன்பின்பு அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டிலும் உரையாற்றிய ஒட்டேகா ஆசிய, ஐரோப்பிய விஜயங்களையும் அம் மாதத்தில் மேற்கொண்டனர்.

1986 களில் றேகனின் மிக நெருங்கிய வந்தீன் அமெரிக்க கூட்டாளிகளே இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண வற்புறுத்தினர். அதன்பின்னரே தமது சொந்த நாட்டின் அரசியல், பொருளாதார பிரச்சனைகளின் பக்கம் தாம் கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினர். இதேவேளை 1986 இல் குவாத்தமாலா இல் கூடிய மத்திய அமெரிக்க அதிபர்களின் மாநாடு குறிப்பாக எதையுமே சாதிக்கவில்லை. இம் மாநாடு அடுத்த வருடம் மீண்டும் கூடுவதற்கான ஒப்புதலுடன் கலைந்து போயிற்று. 1986 முழுவதும் நிக்கரகுவா மக்கள் கொல்லப்படுவது தொடர்ந்த வண்ணமே இருந்தது. நிக்கரகுவாவுக்கு எதிரான நேரடி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென அமெரிக்காவுக்கு வத்திக்கான், ரஷ்யா போன்ற பல முனைகளிலிருந்தும் வற்புறுத்தல்கள் வந்தன.

நிக்கரகுவா கொன்றாஸை (Cotras) கலைப்பதற்கான திட்டமொன்றை முன்வைத்தது. ஐநா, OAS (அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு), கொன்றாடோறா (Contadora) மற்றும் லிமா குழு (Lima Group) என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளை சர்ச்சைக்குரிய நிக்கரகுவா–கொன்டுராஸ் எல்லைப் பிராந்தியத்தை பார்வையிட நிக்கரகுவா அழைப்பு விடுத்தது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கொன்றாடோறா (Contadora) மற்றைய அமைப்புக்களின் செயலாளர்கள் அடங்கிய சமாதான குழு ஒன்றை அமைப்பதென முடிவு செய்தது.

1986 இன் இறுதியில் அமெரிக்க உள்நாட்டு அரசியல் நிலைமை நிக்கரகுவாவிற்கு எதிரான நேரடி இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்குச் சாதகமான நிலைமையைக் கொண்டிருக்கவில்லை இதே காலப் பகுதியில்தான் 'கொன்றாகேற்' (Contragate) ஊழல் விவகாரம் வெளியில் வந்தது. அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை சட்டவிரோதமான முறையில் ஈரானுக்கு இராணுவ தளபாடங்களை இரகசியமான முறையில் விற்று அதன்மூலம் கிடைத்த பணத்தை கொன்றாசிற்கு (Contras) வழங்கியதாக அமெரிக்க அற்றனி ஜெனரல் எட் மீச் (Attorney - General Edmeese) அறிவித்தார்.

## மத்திய அமெரிக்காவின் தலைமையேற்பு

அண்மைய நாடுகளின் அரசியல் மாற்றங்கள் அமைதிக்கான சிறிதளவு நம்பிக்கையை அளித்தது. குவாத்தமாலாவில் நாட்டின் அதிபராக ஒரு சாதாரண குடிமகன் செரிசோ (Cerexo) ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்காகவும் உழைப்பேன் என்ற உறுதிமொழியுடன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1986 மே மாதம் ஒஸ்கார் அரியாஸ் (Dr Oscar Arias) கோஸ்ராறிக்காவின் அதிபராகி தீவிரமாக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையின் மூலம் சமாதானத்தை தேடினார். இவ் இரு புதிய தலைவர்களும் தங்கள் நாட்டை எதிர்ப்புரட்சி இராணுவங்களின் (Contras) தளமாக பாவிக்க அனுமதிக்கப் போவதில்லை என அறிவித்தனர். எல்சல்வடோரின் அதிபர் டுவாற்றே (Duarte) தான் சர்வதேச ரீதியில் சமாதானத்திற்காகப் போராடுபவர் என்ற நற்பெயரை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்ள முயற்சித்தார்.

அதிபர் ஆரியஸ் குவாத்தமாலா அதிபருடன் சேர்ந்து பிராந்திய திட்டமொன்றைக் கொண்டு வந்தார். இத் திட்டத்தின்படி இப் பிராந்தியத்தியத்திலுள்ள வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களை வெளியேற்றவும், போர்நிறுத்தமொன்றைக் கொண்டு வரவும், ஜனநாயக அடிப்படையில் பலகட்சி தேர்தல் முறையை 5 நாடுகளிலும் நடாத்தவும் கோரிக்கைகள் விடப்பட்டன. மத்திய அமெரிக்க அதிபர்களின் மாநாட்டிற்கு முன்தினம் றேகனின் தீவிரமானதும் பரிதாபகரமானதுமான தடுப்பு முயற்சியையும் மீறி இந்த 5 நாட்டு அதிபர்களும் மேற்படி கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர். அமெரிக்காவின் அடாவடித்தனம் "மத்திய அமெரிக்காவில் நிலையான சமாதானத்திற்கு வழிவகுப்போம்" என்ற ஒப்பந்தத்தில் இந் நாடுகளை கொண்டுபோய் நிறுத்தியது. இச் சமாதானத்திட்டம் "எஸ்குப்புலாஸ்–2" (Esquipulas-2) என அழைக்கப்பட்டது. இத் திட்டம் சர்வதேச அளவில் அதிக ஆதரவைப் பெற்றது. எட்டு நாடுகள் குழு (Lima Group), ஐநா சபை, OAS (அமெரிக்க நாடுகளின் அமைப்பு) என்பவற்றின் செயல் அதிபர்களும் ஐரோப்பிய சமூகம், கனடா, சோசலிச நாடுகள் என்பனவும் அமெரிக்காவின் சில முக்கிய அரசியல் பிரிவினரும் இத் திட்டம் பற்றி கருத்தில் எடுத்தனர்.

அரசியல், இராணுவ, ராஜதந்திர நிலைப்பாடுகள் தொடர்ந்தும் முன்போலவே நிக்கரகுவாவில் இருந்து வந்தது. கொன்றாஸ் இன் பரவலான வன்முறைக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிக்கரகுவா "எஸ்குப்லாஸ்–2" திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான ஆயத்தங்களையும் செய்துகொண்டிருந்தது. இந்த திட்டத்தினை நிறைவேற்ற அமெரிக்கா வின் குறுக்கீட்டை முறியடிக்க வேண்டியிருந்தது. இதற்கு சர்வதேச ரீதியிலான ஆதரவைத் தேடியது நிக்கரகுவா. அமெரிக்காவோ இதற்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிலடியாக 1986 செப்டம்பரில் கொன்ராஸிற்கு மேலும் 3.2 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியது. நிக்கரகுவா இதற்கு பல பதில் நடவடிக்கைககளை மேற்கொண்டது. 1000 சமோசா இராணுவத்தினரை (National Group) சிறையிலிருந்து விடுதலை செய்தனர். உள்நாட்டு அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்தனர். கொன்ராசிற்கு அமெரிக்கா உதவி செய்யாவிடில் பொதுமன்னிப்பு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தனர். எல்லாவற்றையும் விட ஆச்சரியமான தொன்றாக போர் நிறுத்தம் சம்பந்தமான பேச்சுக்களை ஒரு மத்தியஸ்தரின் முன்னிலையில் கொன்ராகடன் (Contras) மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தனர்.

வாஷிங்டனில் எஸ்குப்புலாஸ்–2 சாதகமான வரவேற்பைப் பெற்றது. ஜனநாயகக் கட்சியின் நீண்டகால அங்கத்தவர் ஜிம் ரைட்ஸ் சமாதானத்துகான இந்தப் பிரேரணையை ஆதரித்து அறிக்கையொன்றை வெளியிட்டார். கொன்ராசிற்கான (Contras) 270 மில்லியன் டொலர் உதவிக்கான ரேகனின் கோரிக்கை முட்டாள்தனமானது என்றும் விமர்சித்தார். அத்துடன் ரேகனின் ஆலோசகர்கள் அமைதித் திட்டத்தை குலைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள் என்றும் வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார்.

ரேகன் நிர்வாகத்தின் கொள்கைகள் சரிந்து விழ்ந்தன. சன்டீனிஸ்ரா அரசை தனிமைப்படுத்தும் முயற்சி படுதோல்வியுற்றது. மாறாக நிக்கரகுவாவின் ராஜதந்திரம், லத்தீன் அமெரிக்காவின் சமாதானத்திற்கான முயற்சி என்பன ரேகன் அரசை தனிமைப்படுத்திவிட்டது.

அலெக்சாண்டர் பென்டானா கூறினார் :

”மற்றைய மத்திய அமெரிக்க நாடுகள் மற்றும் அமெரிக்காவின் நம்பகரமான கூட்டாளிகள் எஸ்குப்புலாஸ் இனை எவ்வாறு ஏற்றுக் கொண்டார்களோ, அவ்வாறே நிக்கரகுவாவின் புரட்சியையும் ஏற்றுக் கொண்டனர். நிக்கரகுவா அரசை சட்டபூர்வமானதென ஏற்றுக் கொண்டனர். இவையெல்லாம் ராஜதந்திரத்தினூடாகவே சாத்தியமாயிற்று. இதைத்தான் அமெரிக்கா எல்லா விதத்திலும் எதிர்த்து தீவிரமாகப் போராடியது. தற்போதைய காலகட்டத்தில் அன்னிய தலையீடுகளுக்கு எதிராக சர்வதே ரீதியில் மிகப் பெரிய எதிர்ப்பை எங்களால் அணிதிரட்ட முடிந்தது. இது முக்கியமானது. ஏனெனில் நிக்கரகுவா ரேகன் நிர்வாகத்திற்கு ஒரு ‘மாதிரி’ யாக அமைந்தது. உலக மக்களுக்கும் ஒரு ‘மாதிரி’ யாகவே அது தன்னை நிலைநிறுத்தியது. நாங்கள் இதனை உணர்கிறோம்” என்கிறார்.

1988 இல் மூன்றாவது ‘மத்திய அமெரிக்க அதிபர்களின்’ மாநாடு நடந்தது. இதில் சர்வதேச கண்காணிப்புக் குழு நிக்கரகுவா சமாதானத்துக்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்பதை எடுத்துக் கூறியதோடு அமெரிக்காவின் கொன்ராசிற்கான (Contras) உதவியை வன்மையாகக் கண்டித்தது. நிக்கரகுவா மீண்டும் பல முயற்சிகளை இம் மாநாட்டில் முன்வைத்தது. அவற்றில் ஒன்று கொன்ராகடன் (Contras) நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான முயற்சியை மீண்டும் டானியல் ஒட்டேகா முன்வைத்தார். அமெரிக்கா– நிக்கரகுவா இரு நாடுகளுக் கிடையிலான பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். தாங்கள் கொன்ராகடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டால், அமெரிக்கா தங்களுடன் பேச்சுக்களை தொடங்கும் என்று அமெரிக்கா கூறியதையும் ஞாபகப்படுத்தினார்.

ரேகன் நிவாகத்தின் இறுதிக் காலகட்டங்களில் அமைதியைக் குலைக்கும் அவர்களது முயற்சி கொன்ராகேற் ஊழல் விவகாரத்தால் மேலும் வலுவிழந்து போயிற்று. எஸ்குப்புலாஸ்–2 திட்டம் பிராந்திய, சர்வதேச ஆதரவுகளைப் பெற்றது. ஆனாலும் இத் திட்டத்தின் செயற்பாடு அமெரிக்க (1988) பொதுத் தேர்தலில் ‘யார் வெல்வார்கள்’ என்ற காத்திருப்பால் சற்று வேகம் தணிந்தது.

1989 பெப்ரவரி மத்திய அமெரிக்க அதிபர்களின் மாநாடு மீண்டும் நடந்தது. ஜோர்ஜ் புஸ் தனது பிராந்தியக் கொள்கையை சரியாக வரையறுக்காத நிலைமையிலும், வயலெட்டா சமோராவின் வெற்றிக்கு முன்பாகவும் இது நடந்தது. இந்த உச்சி மாநாடு கொண்டுராசின் (Honduras) அதிபர் அஸ்கோனவின் பிரேரணையை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஏற்றுக்கொண்டது. இதன்படி 90 நாட்களுக்குள் கொன்ராஸ் (Contras) இனை நிராயுத பாணியாக்குவதோடு இக் கூலிப்படையை முற்றுமுழுதாக கலைத்து விட வேண்டும்.

குவாத்தமாலா அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்......

”உண்மை என்னவெனில் தொடரும் நிலைமைகள் சமாதானத்தை வேண்டி நிற்கின்றன. இதற்கு மாறாக வன்முறையைத் தொடர்வதன் மூலம் பிராந்திய அபிவிருத்திக்கும் பொருளாதார சமூக நெருக்கடிகளுக்கான தீவுகளுக்கும் பாதகமாகவே அமையும்........ நாங்கள் எஸ்குப்புலாஸ்–2 இன் மூலம் சர்வதேச ரீதியில் புதியதொரு கட்டத்தில் காலடி வைத்துள்ளோம். நாங்கள் இப்போது உடன்பாடுகளுக்கு வருவதுபற்றியும் எதிர்ப்புகளை முறியடிப்பது பற்றியும் பேசுகிறோம். இதன் மூலம் நாங்கள் போரை நிராகரிக்கிறோம்” என்றார்.

ஆனால் மத்திய அமெரிக்காவின் சமாதான முயற்சிகள் மூலம் நிக்கரகுவாவின் இரத்தம் சிந்தலை தவிர்க்க முடியாமல் போய்விட்டது. ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் இன் ‘மனிதாபிமான’ உதவி (50 மில்லியன் டொலர்) கொன்ராசை (Contras) 1989 ஏப்ரலில் சென்றடைந்தது. எப்படியாயினும் சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் இடப்பட்டடுத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது. சமோரோவின் வெற்றிக்குப்பின் அவர் சண்டினிஸ்ராஸின் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் கொன்ராசை (Contras) நிராயுதபாணியாக்குவதைத் தொடர்ந்தார்

FSLN தனது அரசியல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளவில்லை. இவர்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்த வேளையிலும் FSLN தனது மேலாண்மையை இழக்காததோடு மிகமுக்கியமான அரசியல் சக்தியாகவும் விளங்கியது. சமோரோவின் அரசிலும் சண்டினிஸ்ராக்களே –கும்பேட்டா ஒட்டேகா (Humberto Ortega) வின் தலைமையின் கீழ்– நிக்கரகுவாவின் இராணுவமாக இருந்தனர். அத்துடன் இராணுவத்தின் பெரும்பகுதியினர் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் சண்டினிஸ்ராவின் உணர்வுபூர்வமான அனுதாபிகளாகவும் இருந்தனர். FSLN இன் ஆதரவாளர்களோ அரச அதிகார வர்க்கத்தில் பங்குகொள்வோராயும் உள்ளனர். இவ்வாறு அரசின் மிக முக்கிய நிர்வாக இயந்திரங்களான இராணுவம், பொலிஸ் போன்றவற்றில் FSLN இன் செல்வாக்கு ஓங்கியே உள்ளது.

## சர்வதேச ரீதியிலான ராஜதந்திரம்

புரட்சிகர நிக்கரகுவாவின் ராஜதந்திர முயற்சிகள் பரந்தளவு செல்வாக்கைப் பெற்றிருந்தன. லத்தீன் அமெரிக்க நாடுகள், 'சோசலிச' நாடுகள் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்றன நிக்கரகுவாவில் அமெரிக்காவின் தலையீட்டை தடுப்பதில் உடன்பாடு கொண்டிருந்தன. கியூபா பெருமளவு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கியது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் –நிக்கரகுவாவின் தேவையை நிறைவு செய்யக் கூடியளவு இல்லாவிட்டாலும் – தொடர்ந்து பொருளாதார உதவிகளை வழங்கியது. சண்டினிஸ்ராக்களின் புரட்சிகர பொருளாதாரத் திட்டங்களுக்கும் அவை உதவியதுடன், அமெரிக்க எதிர்ப்பையும் மீறி வர்த்தகத் தொடர்புகளையும் பேணின.

சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பொருளாதார உதவிகளைச் செய்தாலும், கியூபாவிற்கு உதவியது போலன்றி, தீவிரமான உதவியையோ ஆதரவையோ வழங்கவில்லை. வெளிநாட்டுக் கடன்களை நிக்கரகுவா அடைக்க முடியாத நிலைமையில் இருந்ததால் 1984 இல் மெக்சிக்கோ நிக்கரக்குவாவுக்கான எரிபொருள் வழங்கலை நிறுத்தியது. இது எரிபொருள் வழங்கும் மற்றைய நாடான சோவியத் யூனியனை முக்கியம் பெறச்செய்தது. இதேவேளை மூன்றாம் உலக நாடுகளிடமிருந்து பொருள் உதவியையும் ராஜதந்திர உதவியையும் பெறுவதில் நிக்கரகுவா வெற்றி பெற்றது. இந்தியா, அல்ஜீரியா, ஈரான், லிபியா என்பன இந்நாடுகளில் அடங்கும்.

முக்கியமாக நிக்கரகுவாவின் நிலைமையினை உலகளாவிய நிலைக்கு எடுத்துச் செல்வதில் அதன் நட்பு சக்திகள் பெரும் பங்காற்றின. 1989 இல் இவ்வாறான அமைப்புகள் சுமார் 2500 வரை செயற்பட்டன. இவற்றின் வளர்ச்சிக்கு நிக்கரகுவா அரசு உதவி செய்தது. இவைகள் நிக்கரகுவாவின் புரட்சிக்கு தேவையான பொருளாதார, அரசியல் பங்களிப்புகளைச் செய்து வந்தன. குறிப்பாக, அமெரிக்காவில் தேவாலயங்கள், மற்றைய தோழமை அமைப்புக்கள் என்பன பொருள் வகை உதவிகளைச் செய்ததோடு, அரசியல் ரீதியில் அமெரிக்க அரசினது பிரச்சாரத்தை முறியடிப்பதிலும் இயன்றளவு செயற்பட்டன. சில அமெரிக்க மாநிலங்களின் கவர்ணர்கள் லத்தீன் அமெரிக்காவிற்கு எதிராக தங்களது மாநில இராணுவம் (State National Guards) போரிடுவதற்கு அனுமதியளிக்கவில்லை. இதனால் அமெரிக்க காங்கிரஸ் ஒரு புதிய சட்டத்தின் மூலம் கவர்ணர்களின் 'வீற்றோ' அதிகாரத்தை ரத்துச் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

நிக்கரகுவா அரசு மக்களிடையிலான நேரடி ராஜதந்திர உறவை ஊக்குவித்தது. (People to People Diplomacy) நிக்கரகுவாவிற்கு அமெரிக்கா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் விஜயம் செய்தனர்.

இதுபற்றி பென்டானா குறிப்பிடுகையில்,

" இவர்களில் பெரும்பகுதியினர் சண்டினிஸ்ராக்களின் தீவிர ஆதரவாளர்கள் ஆகமாட்டார்கள் என்பதை உறுதியாக நம்புகிறோம். ஆனாலும் ரேகன் நிர்வாகம் பிரச்சாரப்படுத்தியதுபோல் நிக்கரகுவா பொது உடமையின் குகையல்ல என்பதை அவர்கள் உணர்வார்கள். இவ்வாறான பொய்யான தகவல்கள், பிரமைகள் அம்பலப்படுத்த வேண்டும். இது மிகவும் முக்கியமானது. இங்கு விஜயம் செய்த வெளிநாட்டவர்களில் அமெரிக்க மக்களே அதிகமானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்வார்கள், ஒரு வகையில் இவர்கள் எங்களது தூதுவர்கள் ஆவார்கள். இங்கு நடக்கும் எல்லாவற்றையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமலும் போகலாம். ஆனால் அவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் – சுயநிர்ணய உரிமையை எல்லோரும் மதிக்க வேண்டும் என்பதை. !!

o முற்றும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ✸ இலங்கையிலிருந்து சில செய்திகள் ✸

## ஓரம் தள்ளப்படும் பிரேமதாசா விசுவாசிகள்

முன்னாள் ஜனாதிபதி கொலையைத் தொடர்ந்து நடைபெற்ற அதிகார மாற்றத்தின் மூலம் பிரேமதாசா விசுவாசிகள் ஓரம் தள்ளப்பட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் பிரேமதாசா விசுவாசிகள் தாம் பலமடைவதற்கு முயற்சித்த போதும் அவர்கள் வெற்றி பெறவில்லை. பிரேமதாசா எதிர்ப்பாளர்களே வெற்றி பெற்றனர். பிரேமதாசா விசுவாசிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக பிரேமதாசாவின் பாரியாரான ஹேமா பிரேமதாசாவை அரசியலுக்குக் கொண்டுவர முயற்சித்தனர். அதன் ஆரம்ப கட்டமாகவே பிரேமதாசாவின் இறுதிச் சடங்கின்போது, நிகழ்ச்சி நிரலில் இருந்த ஒழுங்கை மாற்றி ஹேமா பிரேமதாசாவை பேச வைத்தனர். அவர் பேசும் போது பிரேமதாசாவின் பணியை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு அறைகூவல் விடுத்தார்.

பிரேமதாசா விசுவாசிகள் இவ்வாறு முயற்சித்த போதும் பிரேமதாசா எதிர்ப்பாளர்கள் அதற்குமுன் உஷாரடைந்து திட்டமிட்ட அலுவல்களில் ஈடுபடத் தொடங்கினர். ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் ஆக்கப்பட்டதோடு ஹேமா பிரேமதாசா திட்டமிட்டு ஓரம் தள்ளப்பட்டார். அவர் இப்போது புதுக்கட்சி ஒன்றை உருவாக்க யோசிப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. அவ்வாறு அவர் அரசியலுக்கு வந்தால் தமிழ் நாட்டு ஜானகி அம்மா போல படுதோல்வி அடைவார் என தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் கிண்டலடித்துள்ளன.

அரசியல் மட்டத்தில் பிரேமதாசா விசுவாசிகள் ஓரம் கட்டப்பட்டு வருவதைத் தொடர்ந்து தற்போது நிர்வாக மட்டத்திலுள்ள பிரேமதாசா விசுவாசிகளும் ஓரம் கட்டப்பட்டு வருகின்றனர். 'லேக் கவுஸ்' பத்திரிகைகளில் ஒன்றான "ஒப்சேவர்" பிரதம ஆசிரியரை தானாக விலகும்படி உயர்மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூபவாகினி தொலைக்காட்சி செய்திப் பிரிவு அதிகாரி மொஹான் சமரநாயக்கா அப் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் பெனடிக் குமாரகேயும் அப் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். இம் மூன்று அமைப்புக்களும் மக்களோடு தொடர்புடைய அமைப்புக்களாக இருப்பதனால் இவர்களை விலக்குவதன் மூலம் பிரேமதாசா விசுவாசிகளுக்குள்ள மக்கள் தொடர்பை நீக்குவதே இதன் நோக்கமாகும். இவற்றை விட படைகளைப் பொறுத்த வரையிலும் கூட பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட "இரகசிய படைப் பிரிவு" ஒன்றாக்கப்பட்டதோடு பிரேமதாசா எதிர்ப்பாளரான ரவி ஜெவர்த்தனா அதிரடிப்படைப் பிரிவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தீவிர பிரேமதாசா எதிர்ப்பாளரான முன்னாள் ஜனாதிபதி J.R. ஜெவர்த்தனாவின் மகனாவார்.

பிரேமதாசா எதிர்ப்புக் கோஷ்டிக்கு முன்னாள் ஜனாதிபதி J.R. ஜெவர்த்தனாவே தலைமை தாங்குகின்றார் என நம்பப்படுகின்றது. இன்றைய அரசியலில் J.R இன் நிலையை "திரிசூல" என்ற சிங்களப் பத்திரிகை கார்ட்டூன் மூலமாக பின்வருமாறு கிண்டலடித்துள்ளது.

*மரண அஞ்சலிக்கும் போகவில்லை*
*ஓட்டுப் போடவும் போகவில்லை*
*உயர் பீடத்துக்கும் ஆசையில்லை*
*ஆனால் நூல் மட்டும் என் கையில் !*

* *

## வாக்களிக்க அடையாள அட்டை

**–மலையக மக்களின் வாக்கை மறிக்கும் சதி முயற்சி**

கடந்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கு – கிழக்கிற்கு வெளியே தமிழ் மக்கள் செறிவாக வாழும் இடங்களில் இருந்து 21 பேர் வரை தமிழ் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். அதுவும் நுவரேலியா மாவட்டத்தில் 17 உறுப்பினர்களில் 10 பேர் தமிழர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அம் மாவட்டத்தில் ஆகக் கூடுதலான வாக்குகளையும் தமிழ் உறுப்பினர்களே பெற்றுள்ளனர். நுவரேலியா மாவட்டத்தின் அரசியல் ஆதிக்கம் தமிழர்களின் கைக்கு மாறி வருவதையே இம்முடிவுகள் காட்டி நிற்கின்றன. இந்நிலை தற்போது பேரினவாத சக்திகளை கிலிகொள்ளச் செய்துள்ளது. அவர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து எப்படியாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்களின் அரசியல் ஆதிக்கத்தை உடைக்கும் முயற்சிகளில் தற்போது இறங்க ஆரம்பித்துள்ளனர். அதன் ஆரம்ப கட்டமாகவே தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டையைக் கோரும் சட்டம் எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மலையகப் பிரதேசங்களில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்களுக்கு அடையாள அட்டை கிடையாது. அவர்களில் பலர் நீண்ட காலமாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தும் இலகுவான முறையில் அடையாள அட்டை வழங்குவதற்கான எந்தவிதமான முயற்சிகளிலும் அரசு இறங்கவில்லை. இந்நிலையில் அவர்கள் வாக்களிப்பதனை தவிர்ப்பதற்காகவே அடையாள அட்டை முறை கொண்டு வரப்படுகின்றது. ஏற்கனவே வாக்காளராக பதிவதற்கு பிரஜாவுரிமைச் சான்றிதழைக் கேட்டிருந்தது. தற்போது அடையாள அட்டையைக் கேட்கின்றது. இதைவிட பல கிராம சேவையாளர்கள் அண்மையில் வாக்காளர் விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்கும் போது பல இடங்களில் தமிழ்ப் பகுதிகளை திட்டமிட்டு தவிர்த்து வந்துள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளது.

அடையாள அட்டைக்கு புறம்பாக தமிழ் பிரதிநிதிகளின் தெரிவைக் குறைக்கும் வகையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கும் திரைமறைவில் முயற்சி நடைபெறுகின்றது. இவ்விகிதாசார பிரதிநிதித்துவத்தினாலேயே கொழும்பிலிருந்தும் மலையக பிரதேசங்களிலிருந்தும் தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். பழைய மாதிரி தொகுதி ரீதியான தேர்தல் முறையைக் கொண்டு வருவதன் மூலமோ அல்லது தற்போதுள்ள மாவட்டங்களின் எல்லைகளை மாற்றுவதன் மூலமோ தமிழ் பிரதிநிதிகளின் தெரிவைக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்களின் பல்வேறு அமைப்புகளும் இது தொடர்பாக காரசாரமான கண்டனத்தை தெரிவித்த போதும் அரசு அதற்கு செவிசாய்த்ததாக தெரியவில்லை. அரசோடு ஒட்டிக்கொண்டிருக்கும் இ. தொ. கா. இது தொடர்பாக ஓரிரு அறிக்கைகளுடன் மட்டும் தன் எதிர்ப்பை நிறுத்தியுள்ளது. அரசு இதில் வெற்றி பெறுமானால் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை மட்டுமல்ல இ. தொ. கா வின் அரசியல் ஆதிக்கத்தையும் கூட உடைத்துவிடும் என்பதை இ. தொ. கா உணரவில்லைப் போல் தெரிகின்றது.

* *

## மேல்மாகாணத் தமிழர்களின் தலைமை மீண்டும் இ.தொ.கா விடம் !.

மேல்மாகாணத் தமிழர்களின் தலைமை -குறிப்பாக கொழும்பு மாவட்டத் தமிழர்களின் தலைமை- இ.தொ.கா விடம் இருக்கக் கூடாது என்பதற்காக UNP பல முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது. அதன் ஒரு படியாகவே மாகாணசபைத் தேர்தலில் சட்டத்தரணியான மோதிலால் நேருவையும் இந்திய வம்சாவழியினரான ராஜகோபால் மாஸ்டரையும் போட்டிக்கு நிறுத்தியது. அதோடு நின்றுவிடாமல் முன்னாள் ஜனாதிபதியின் மாபெரும் பக்தரான அன்பழகன் தலைமையிலான தெலுங்கு காங்கிரசையும் சுயேட்சையாக போட்டியிட வைத்தது. அதுவும் அச் சுயேட்சைக் குழுவில், இ.தொ.கா வேட்பாளரான வேலம்மாள் செல்லச்சாமியின் வெற்றி வாய்ப்பைக் குறைப்பதற்காக செல்லச்சாமியின் முதலாவது மனைவியின் மகனான திருக்கேஸ்வரனையும் போட்டிக்கு நிறுத்தியது.

UNP இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்தபோதும் அவை அனைத்தும் தவிடுபொடியாகியது. UNP நிறுத்திய அனைவரும் தோல்வியடைந்தார்கள். இ.தொ.கா நிறுத்திய வேலம்மாளும் யோகராஜனும் வெற்றியடைந்தார்கள். உண்மையில் வேலம்மாளை வேட்பாளராக நிறுத்தியமையை இந்திய வம்சாவளியினரின் உயர் வர்க்கத்தினர் கூட விரும்பவில்லை. இதற்கு வேலம்மாள் செல்லச்சாமியின் இரண்டாவது மனைவியென்பதும், செல்லச்சாமியின் செயலாளராக இருந்து மனைவியாக வந்தவர் என்பதுமே காரணமாக கூறப்பட்டது. இவ்வாறு எதிர்ப்புக்கள் காணப்பட்டபோதும் 32,000 க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று வேலம்மாள் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு கிடைத்த வாக்குகள் 1989ம் ஆண்டு தேர்தலில் செல்லச்சாமிக்கு கிடைத்த வாக்குகளைவிட அதிகமானதாக இருந்தது.

மேல்மாகாணத்தில் இவ்வாறு இ.தொ.கா. வெற்றியீட்டியமைக்கு காரணம் இந்திய வம்சாவழியினர் அனைவரையும் ஓரணியில் திரட்டுகின்ற இந்தியர் தேசியத்தை ஆரம்பம் முதல் வளர்த்தமையும், வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு தலைமை கொடுக்கின்ற ஒரே ஒரு அமைப்பாக விளங்கியமையும் ஆகும். இ.தொ.கா. என்னதான் பிற்போக்கான அமைப்பாக இருந்தாலும் கூட வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் பிரச்சனைக்காக போராடக்கூடிய இன்னோர் அமைப்பு உருவாகும்வரை அதன் வெற்றி தவிர்க்க முடியாததாகுமென தமிழ் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீண்டும் ஓர் செய்தி

வானத்தில்
பறவை ஒன்று
சிறகசைக்க மறந்து
நின்றது
வசந்த கால மரங்களும்
வாடிக் குனிந்தது.

மீண்டும்
அந்த மரத்தின்
கொப்பொன்று
முறிந்து விழுந்தது
இல்லை இல்லை
வீழ்த்தப்பட்டது.

புழுக்கத்தை அடக்கி
பொருமி யிருந்த
மரங்கள் மட்டும்
இன்னும் வாழ்கின்றனவாம்

அசைந்து காற்றை
அள்ளி வீசியதற்காய்
அந்தக் கெப்பும்
வீழ்த்தப்பட்டது.

எஞ்சி இருப்பனவும்
எங்கு ? இருக்கின்றன?
எப்போ? வீழும்?

பிடிக்கப்பட்டதும்
தடுக்கப்பட்டதும் தான்
செய்தியாயின
இப்போ நீ மாத்திரம்
குதறப்பட்டதாய்
காற்றோடு கலந்து வந்த
செய்தி ஒன்று சொல்லிற்று

அசையும் காற்றும்
அடித்து நொருக்கப்படும்
ஒரு சுதந்திர
தேசத்தில்

முற்றத்து நிலவொளியில்
முகமிழந்து வாழும்
மனிதனாக நீ
இருக்க வில்லை.

உன் வீட்டு வாசலுக்கு
கனமான செய்தியினை
காவி வந்த உன்
உடை சொல்லிற்று
நீ சாகடிக்கப்
பட்டதாய்.

– காவியா *

(91 ஆகஸ்ட்டில் புலிகளால் செல்வி, தில்லை உட்பட பலர் கடத்தப்பட்டது யாவரும் அறிந்ததே! அண்மையில் தில்லை வீட்டிற்கு சென்ற புலி உறுப்பினர்கள் அவரின் உடையைக் கொடுத்து அவருக்கு மரண தண்டனை வழங்கி விட்டதாகக் கூறினார்களாம்.)

www.tamilarangam.net

# "ஞானி சந்திரனைக் காட்ட மூடன் சுட்டுவிரலை பார்த்தானாம்"

இந்தப் பழமொழி இன்னமும் காலாவதியாகிப் போய் விடவில்லை என்பதை 'சமர் – 8' ஐ பார்த்ததும் தான் புரிந்துகொள்ள முடிகிறது. மார்க்ஸ் என்ற மேதை எதையோ விளக்க, சமர் தான் கூறுவதுதான் மார்க்சியம் என்னும் கற்றுக்குட்டித்தனத்தை வேறு எப்படி குறிப்பிடுவது.

'தலை சுற்ற வைக்குமே என மலைமுகடுகள் மீது ஏறிப் பார்க்க துணியாதவனால் அறிவுச் சிகரங்களை தரிசிக்க முடியாது என்றார் மார்க்ஸ். தத்துவார்த்த பிரச்சனைகள் சமர் நினைப்பது போன்று அவ்வளவு எளிதானது அல்ல. அதற்கு கடும் உழைப்பும், கிரகிப்பும், விவாதங்களும் இன்றியமையாதன. இவற்றைத் தவிர்த்து விட்டு இலகுவாக அவதூறு பொழிவது, முத்திரை குத்துவது, தனிநபர் வசைபாடுவது எல்லாம் தத்துவார்த்த துறையில் தங்களது சோம்பல் தனங்களை மறைப்பதற்கு கற்பிக்கும் காரணங்களேயன்றி வேறென்ன ! மார்க்சியத்தை காப்பாற்றுகிறோம் என அப்பாவித்தனமாக நினைத்து மார்க்ஸியத்தை கல்லறைக்கு அனுப்ப முடிவு செய்த சமர் போன்ற நபர்கள் வரலாற்றில் நிறையவே இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் லெனின், மாவோ போன்ற பலர் இத்தகைய காயடிப்பு முயற்சிகளுக்கு எதிராக கடுமையாகப் போராடி அவர்களிடம் இருந்து மார்க்ஸியத்தை விடுவித்ததனாலேதான் மார்க்ஸியம் இன்னும் ஒடுக்கப்பட்ட மக்களின் வழிகாட்டியாய், ஒரு புரட்சிகர தத்துவமாய் திகழ முடிகிறது.

சமர் கூறுகிறது, தான் இயங்கியல் ரீதியில் பிரச்சினைகளைப் பார்ப்பதாக! முதலில் சமர் இயக்கப் போக்கைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். இயக்கம் என்பது முன்னதைப் பிரதி செய்வதல்ல– இருக்கும் நிலையில் இருந்து வேறொரு நிலைக்கு கடந்து செல்வது. இதை சரியான முறையில் புரிந்து கொண்டமையே லெனின், மாவோவின் வெற்றிக்கு காரணம். முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது மார்க்ஸினது கணிப்பீட்டிற்கு மாறாக ஏகபோகமாக அதாவது ஏகாதிபத்தியமாக பரிணமித்தது. அதனால் ஏகாதிபத்திய காலகட்டத்தில் அதன் வளர்ச்சியை லெனினே விளக்கினார். மேலும் ரசிய நிலைமைகளில் புதிய பொருளாதாரத் திட்டத்தை லெனினே உருவாக்கினார். லெனினும் சமரைப் போன்று மார்க்ஸை பாடமாக்கியிருந்தால் மார்க்சியமும் 19ம் நூற்றாண்டுடன் தனது புரட்சிகர ஆற்றலை இழந்திருக்கும். ஆகவே சமரின் பார்வையில் முதல் திரிபுவாதி லெனின் ஆகவே இருக்க வேண்டும். அதேபோல் சீனப் புரட்சியும் மாவோவின் சிந்தனைகளும் மார்க்சியத்திற்கு மேலும் பங்காற்றின. சீனா, புரட்சியின் போது அரைக்காலனித்துவ அரை நிலப்பிரத்துவ நாடாக இருந்தது. சீனாவின் விசேச நிலைமைகளையும் அதன் வர்க்க சார்புகளையும் சரியாக பகுத்தாய்ந்த மாவோ ஜப்பான் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அரைநிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் தேசியப் புரட்சி, சோசலிசப் புரட்சி என்ற இரு கட்ட புரட்சிகளைப் பற்றி குறிப்பிட்டார். மாவோ லெனினை அப்படியே பிரதியீடு செய்யவில்லை. அதேவேளை ஸ்டாலின் மற்றும் 3ம் அகிலத்தின் தவறான வழிகாட்டுதல்களை விமர்சனம் செய்தார். அதனால்தான் சீனாவில் புரட்சி சாத்தியமாயிற்று. மார்க்ஸையும், லெனினையும் மாவோ அப்படியே பிரதி செய்யாத படியால் சமரின் பார்வையில் மாவோவும் திரிபுவாதிதானே?

மேலும் மார்க்சியத்தால் வர்க்கங்கள், கட்சி ஸ்தாபன அமைப்பு விதிகள் பற்றி லெனினாலும் இயங்கியல் பற்றி மாவோவாலும் தேசிய பிரச்சினைகள் பற்றி ஸ்டாலின், ஒட்டோபவர் போன்றோர்களாலும் பல புதிய கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டன இவர்கள் எல்லோருமே ஸ்தூலமான நிலைமைகளுக்கான ஆய்வை மார்க்ஸ் கூறிய வகையில் இருந்து அப்படியே பொருத்த முயற்சிக்கவில்லை. சமர் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன மார்க்சியத்தை சரியான முறையில் கிரகித்தவர்கள் அதனை ஒரு வேத நூல் போல் கருதி வழிபட விரும்பவில்லை என்பதையே வரலாறு நிரூபிக்கிறது. மார்க்சியத்தின் வளர்ச்சிக்கு ஜேர்மன், பிரெஞ்சு, ரசிய புரட்சிகள் எப்படி பங்காற்றியதோ அதேபோல் சீனப் புரட்சியும் இன்னும் உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, நடைபெறப்போகின்ற புரட்சிகள் புதிய பங்களிப்புக்களைச் செய்யும்.

சமர் வெறும் வசனங்களில் நின்று விளையாடாது.... முத்திரை குத்தல், அவதூறு பொழிதல் போன்ற தனது கற்றுக்குட்டித்தனங்களை கைவிட்டு .... ஆரோக்கியமான வழியில் தேசியம், வர்க்கங்கள், பாசிசம் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் பற்றி ஒரு வாதத்தை நடத்த தயாரானால் அத்தகைய நோக்கில் நாம் ஈடுபட எப்போதுமே தயாராக உள்ளோம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள நிலையில் முன்னேறிய பிரிவினரிடையே ஐக்கியம் என்பது வரலாற்றுத் தேவையாக உள்ளது. இந்த ஐக்கியம் என்ற எல்லையை உயிர் நாடியாக கொண்டே விமர்சனங்கள் அமைய வேண்டும். இதை கவனத்தில் கொள்ளாது தொடர்ந்தும் சமர் மேற்கொள்ளும் அவதூறுக்கு (விமர்சனங்கள் அல்ல) சமரின் பாணியில் இறங்கி பதிலளிக்க நாம் தயாரில்லை.

மனிதம் தன்னினச் சேர்க்கை, விபச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பவற்றையும் அங்கீகரிக்கின்றது என்றெல்லாம் மனம்போனபடி கற்பனை பண்ணி எழுதியிருக்கிறது சமர். சமருக்கு கற்பனை பண்ண உரிமை இருக்கிறதுதான்– அதுக்காக இப்படியா ??. "கருவைச் சுமப்பதுடன் உடல், உள ரீதியில் அனுபவிப்பதும் பெண்கள்தான் என்பதால் கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்களின் உரிமை என்பதே எமது நிலைப்பாடு." என்று –(மனிதம்–21 இல்) ஒரு பெட்டிச் செய்தியில்–ஒற்றை வரியில் குறிப்பிட்டிருந்தோம். பெட்டிச் செய்திக்குள்ளும் ஆய்வைத் தேடும் சமர் இந்த ஒற்றை வரியை எடுத்து மயிர்பிளந்து..... வெறும் தர்க்கவியலுக்குள் உழன்று..... தன்னினச் சேர்க்கை, விபச்சாரம் என்பவற்றை மனிதம் அங்கீகரிக்கிறது என்று எழுதியிருக்கிறது. இன்னொரு இடத்தில் மனிதம் புளொட் இயக்கத்தை ஞாபகப்படுத்துகிறது என்றும் மனிதத்திற்கும் புளொட் இற்கும் வித்தியாசம் மனிதத்திடம் ஆயுதம் இல்லை, புளொட் இடம் ஆயுதம் (!) இருந்தது என்றும் சமரின் பேனை அது போன போக்கிலேயே கிறுக்கிச் செல்கிறது. இதையெல்லாம் விமர்சனம் என்றும் அதுவேதான் எழுதுகிறது.

சிவசேகரம் ஒரு இடத்தில் தற்கொலை=கோழைத்தனம் என்ற வாதம் குருட்டுத்தனமானது என வாதிட்டதை சமர் எடுத்துக்கூறி அப்படிப் பார்த்தால் தற்கொலை=வீரம் இதுவே அவரது வாதம் என்று அர்த்தப்படுத்தி வாதிடும் (வெறும் தர்க்கவியல்) விவாதமுறையே சமரின் பொதுப் போக்காக உள்ளபோது..... சமர் ஜனநாயக சக்திகளுக் கிடையில் ஐக்கியம்.... பொது வேலைத் திட்டம்..... என்பதெல்லாம் நடைமுறையில் அதற்கு எட்டாத விசயங்களாகத்தான் இருக்கும்.

மனிதம் குழு காலப்போக்கில் பிளவுபடும் என்ற வகையில் 'எதிர்வு' கூறுகிறது சமர். மனிதம் குழு சுவிஸில் உருவானதும் ஒரு வரலாற்றுத் தேவைதான். அது என்றும் மாறாத அல்லது கலைக்கப்படாத அமைப்பாக நாம் கருதவுமில்லை. மனிதம் ஒரு புரட்சிகர அமைப்பல்ல, கட்சியுமல்ல. இங்கத்தைய வாழ்நிலைக்குள் சமூக அக்கறை கொண்டவர்களால் அது செயற்பட வேண்டிய தேவையையும் பரப்பையும் கவனத்தில் கொண்டு எளிமையாகவே தோற்றுவிக்கப்பட்ட ஒரு வெகுஜன அமைப்பு இது. எமக்கு இந்த அகதி வாழ்வு நிரந்தரமானதில்லை. எனவே மாறுபட்ட சூழ்நிலைகளோ, வரலாற்றுத் தேவைகளோ ஏற்படும்போது இந்த அமைப்பு கலைந்தும் போய்விடலாம். அதாவது மனிதம்குழு நிரந்தரமானதல்ல.

ஆனால் மனிதம் குழுவிலுள்ளவர்கள் சமூக உணர்வு மட்டத்தில் இந்த ஆறு வருட காலப் பகுதியிலும் வளர்ச்சியைக் காட்டியுள்ளதையும், எதிர்காலத்தில் உதிரிகளாகச் சென்றால்கூட குறைந்தபட்சம் 'சோலி வேண்டாம்' என்ற சாதாரண வாழ்க்கை முறைக்கு திரும்புமளவிற்கு ஆன்மீக ரீதியில் இடம் கிடைக்காது. எதிர்கால செயற்பாட்டில் ஒரு மனிதனை சமூகத்தை நோக்கி இன்னும் வளர்த்துவிடும் ஆற்றலை நாம் சாராம்சமாகப் பெற்றுத்தான் இருக்கிறோம். சமரின் அவதூறு, திட்டல்களினாலேயே இதைக்கூட நாம் சொல்ல வேண்டியிருக்கிறதே யொழிய எந்தவித சுயதிருப்திக்காகவும் அல்ல. இதனாலேயே இந்த ஆறு வருட காலத்திலும் மனிதம் –ஒருசிலர் உதிர்ந்து சென்றது தவிர– சொந்த நலன்களின் அடிப்படையிலான உடைவுகள் எதையுமே சந்திக்கவுமில்லை, இதுவரை குழுவாதங்கள் எட்டிப் பார்த்ததுகூட இல்லை. பத்திரிகையை தொடங்குவது.. அறுவர் ஐவராவது ..... நால்வராவது ....... இப்படியே..... குறுகிப்போய் விடும் நிலை எமக்கு ஏற்படவே இல்லை, இழுபறியில் பிய்ந்து போனதுமில்லை. இப்படியொரு நிலையை குறுகிய காலத்துக்குள்ளேயே சந்தித்த சமருக்கு மனிதத்தின் உடைவுபற்றி எதிர்வுகூற என்ன அருகதை இருக்கிறதோ தெரியவில்லை.

தான் படித்த மார்க்சிய சொற்களுக்கு உதாரணங்களைத் தேடி ஓடும் சமருக்கு.......

மனிதம் திரிபுவாதி

நாவலன் ஓடுகாலி

நித்தியானந்தன், சிவசேகரம், ஜெயபாலன் போன்றோர் பிழைப்புவாதி

இன்னும் யார்யாரோ.. ??

இந்த இடத்தில் சமரின் நிலை ஒரு வேட்டைக்காரனின் நிலையை ஞாபகப்படுத்துகிறது.

இரவிரவாக காடுமேடெல்லாம் அலைந்து..... மான், மரை எல்லாவற்றையும் தப்பவிட்டு... சோர்ந்து.... களைத்து...... காலையிலே வீடு திரும்பிய வேட்டைக்காரன் முற்றத்தில் நின்ற கோழியைச் சுட்டுவீழ்த்தியது நினைவுக்கு வருகிறது.

இன்று சமர் 'குழு' வினர்கூட சொந்த மண்ணைவிட்டே ஓடிவரும் நிலையைத் தோற்றுவித்த 'பாசிச' சூழலை உடைக்க.... அந்த சக்திக்கு எதிரான போராட்டத்தில் ஒரு அடியைத்தானும் எடுத்துவைக்க..... செய்யும் பங்களிப்பை புறந்தள்ளிவிட்டு.

புரட்சி ஏதோ உச்சக் கட்டத்தில் இருப்பது போலவும்.... அதை தத்துவார்த்த துறையில் பலவீனப்படுத்த மனிதம் திரிபுவாதிகளாகப் புறப்பட்டது போலவும்.... சமர் உக்கிரமாக அதற்கெதிராக தத்துவார்த்தப் போராட்டம் நடத்துவது போலவும்.....

என்ன இது..... ??

சமரின் இந்தப் போக்கு தொடரும் வரை எமது போராட்டத்தில் ஒரு சிறு துரும்பைத்தானும் அசைத்துவிட முடியாது. அதேவேளை இத்தகைய செயற்பாடுகள் பின்னடைவையே ஏற்படுத்தும்.

வீட்டின் சாவிக்கோத்தை எங்கோ தொலைத்து விட்ட குடிகாரன் விளக்கு கம்பத்தின் கீழே வெளிச்சம் படும் இடத்தில் மட்டும் சாவியை தேடுவது போல....

சமர் விரும்பினால் தேடிக்கொண்டு இருக்கட்டும் !

– ஆர்.குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மாறன் கூறுகிறார் :**

தோழமையுடன் மனிதம் ஆசிரியர் குழுவிற்கு,

*மனிதம் இதழ்-22 இல் வெளிவந்திருந்த எனது கட்டுரையின் சில வரிகள் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டியுள்ளது. எனது விளக்கத்தை தயவுசெய்து பிரசுரிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*எனது கட்டுரையில்*
*1. "'சமர்' மனிதம் இதழ் மீது திரிபுவாதிகள் என முத்திரை குத்தியது பற்றி . . . ." எனவும்,*
*2. "சமர் சஞ்சிகைக் குழு மனிதம் குழுவினரை திரிபுவாதிகள் என முத்திரை குத்தியதில் இருந்த தவறு" எனவும்*
*சில வரிகளை கையாண்டிருந்தேன்.*

*கரிகாலனின் கட்டுரையில் விவாதப் பகுதி என போடாததே தமது தவறு என மனிதம் ஆசிரியர் குழு குறிப்பிட்டதை ஏற்றே நான் மேற்குறிப்பிட்ட வரிகளை குறிப்பிட்டிருந்தேன். விவாதப் பகுதிகளுக்கான கட்டுரைகளுக்கு சஞ்சிகைக் குழு பொறுப்பல்ல என்பதே எனது கருத்தாகும். எனினும் மனிதம் இதழ்-21 இல் வெளிவந்த 'சம(ர்)ருக்கு மறுப்பு' ஆக வந்த ஆசிரியர் குழுவினது கருத்துக்கள் கரிகாலனினது கட்டுரையுடனும் அதன் உள்ளடக்கங்களுடனுமான தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்துவதாலும், இன்னும் தெளிவாக தமது தரப்பை வெளிப்படுத்துகின்ற கருத்துக்களை வெளிக்கொணர்ந்த நிலையில் எனது கணிப்பீடு தவறானதாகி விட்டதென ஏற்றுக் கொள்கின்றேன். அவ் வகையில் ,*
*(1) "சமர் சஞ்சிகை மனிதம் குழுவினரை திரிபுவாதிகள் என முத்திரை குத்தியதில் இருந்த தவறு" என நான் கையாண்டிருந்த வரிகள் தவறானவை என சுயவிமர்சனம் ஏற்கின்றேன்.*

தோழமையுடன்,
மாறன்

---

# சமிக்கப்பட்ட குழந்தைகள்

இலங்கை அரசின் பொருளாதாரத் தடையால் குழந்தைகள் போசாக்குப் பிரச்சினைக்கு பெரிதளவில் குடாநாடு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பான பல்கலைக் கழக மருத்துவ பீடம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் கிடைத்த செய்திகளின்படி யாழ் மாவட்டத்தில் மட்டும் 44,000 குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிலும் 3000 குழந்தைகள் போசாக்கின்மையால் என்றுமே குணப்படுத்தப்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஐந்து வயதிற்கு குறைந்த குழந்தைகளே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவற்றை விட மலேரியா நோயும் யாழ்ப்பான மாவட்ட குழந்தைகளை வாட்டத் தொடங்கியுள்ளது. தற்போது 1140 குழந்தைகள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டள்ளார்கள் என மருத்துவபீட ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. அதிலும் 140 குழந்தைகள் மூளையைத் தாக்கும் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பானத்திலுள்ள அரசு சார்பற்ற நிறுவனங்கள் போசாக்கின்மை, போக்குவரத்துக்கான பணிகளை செய்வதற்குத் தயாராக உள்ளன. ஆனால் அரசிடமிருந்துதான் அனுமதியில்லை.

**அபூரணன் - இலங்கை**

www.tamilarangam.net

**கருத்தாடல்:**

# * கட்சி - அரசு - சிவில் சமூக நிறுவனங்களுக்கிடையேயான உறவு *

நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு இக் கடிதத்தினூடாக, கரிகாலன் மீண்டும் தன் எழுத்துக்களை மனிதத்தில் பதிக்க ஆரம்பித்துள்ளார். ஏற்கனவே மனிதம் 14-15 இல் வெளியான "புலிகள் முதலாளியத் தேசியவாதிகளோ, அன்றி ஏகாதிபத்தியம், தரகு முதலாளியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோ அல்ல" என்ற கரிகாலனின் கட்டுரை சார்பாக 'சமர்' பத்திரிகை மனிதத்தையும், கரிகாலனையும் 'திரிபுவாதிகள்' என்று முத்திரை குத்தியிருந்தமைக்கு, கரிகாலன் எவ்வித பதிலும் கொடுக்கவில்லை என்பது வாசகர்கள் அறிந்ததே! கீழ்வரும் அவரது கடித வடிவிலான இக் கட்டுரையில் சமருக்குப் பதில் எழுதாமைக்குரிய காரணம் "மாக்ஸ், லெனின் போன்றோரின் மேற்கோள்களை மட்டும் நம்பி கட்டுரை எழுதும் சமர் போன்ற ஒரு பத்திரிகை திரிபுவாதி என்று குறிப்பிட்டதை நான் அசட்டை செய்து பதில் எழுதவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். அவரது இக் காரணத்துடன் எமக்கு உடன்பாடு இல்லை, என்பதோடு இக் கட்டுரைகளில் மேற்கோள்கள் பாவிக்கப்படுவதினை முற்றும் முழுதாக நிராகரிக்கின்ற அவரது கருத்தினையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கருத்துக்களைச் சிதைக்காமல் விமர்சனப் பார்வையினூடே, கட்டுரையின் அவசியத்தைப் பொறுத்து மேற்கோள்கள் பாவிக்கப்படுவதில் தவறில்லை என்பது மட்டுமல்ல தேவையானதும்கூட என்பதே எமது கருத்தாகும்.

மேலும் புதிதாகப் பிரசுரமாகும் இக் கட்டுரையில் காணப்படும் கருத்துக்கள் சார்பாக தொடரப் போகும் விவாதங்களுக்கும் கரிகாலன் பதில் அளிப்பார் என்று உத்தரவாதம் அளிக்கும் நிலையிலும் நாம் இல்லை.

ஆயினும், லெனிய கட்சிக் கோட்பாடுகள் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றி ஏற்கனவே இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலரும் பின்பு சார்ள்ஸ்பெதெல்கீமும் அண்மைக்காலமாக இந்தியாவில் இருந்து சுமந்தா பானர்ஜியும், வேறு சிலரும் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர். மார்க்சிய அரசியலில் ஏற்பட்டிருக்கும் இன்றைய தேக்க நிலையில் இக் கருத்துக்கள் விவாதத்திற்குட்படுத்தப்பட வேண்டியதன் தேவை குறித்து இதே அடிப்படையில் அமைந்த கரிகாலனின் கருத்துக்களை இங்கு பிரசுரித்துள்ளோம்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போன்று கரிகாலனின் இக் கட்டுரையிலும் விவாதத்தைத் தூண்டும் வகையில் அமையவில்லை. ஆனால் இக் கட்டுரை விவாதத்துக்குரிய கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதால் வாசகர்கள், சமூகப்பற்றுடையோர் அனைவரும் இக் கட்டுரை சார்பான தமது கருத்துக்களை கருத்தாடலுக்குரிய பண்புடன் முன்வைத்து , விவாதத்தைத் தொடர வேண்டும்.

– ஆர். குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடன் மாறன் அவர்களுக்கு,

நலம். நாடலும் அதுவே.

உங்களது கட்டுரையை நான் 'மனிதம்' பத்திரிகையில் படித்தேன். அதில் நீங்கள் பல விடயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றீர்கள். அதில் நீங்கள் இலங்கைப் பிரச்சனையை அணுகிய முறையுடனும், மு.சிவகுமாரனது கட்டுரை பற்றிய உங்களது கருத்துக்களுடனும் எனக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்த போதும், அவற்றைப் பற்றி நான் இங்கே எதுவும் குறிப்பிடவில்லை. நீங்கள் சுட்டிக்காட்டிய லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் பற்றிய எனது நிலைப்பாடுகள் என்ன என்பதை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறேன்.

அதற்கு முன்பாக நீங்கள் எனது கட்டுரைக்குப் பதில் எழுதிய முறைக்கு நன்றி கூறுகிறேன். 'சமர்' பத்திரிகையில் இருந்து மாறுபட்ட முறையில் நீங்கள் கருத்தைத் தெரிவித்ததனாலேயே நான் உங்களுக்கு பதில் எழுதுகிறேன். ஒருவர் தனது சொந்த ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு மார்க்சிசம், கட்சி போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது என்று கருதுபவன் நான். அதனால்தான் மார்க்ஸ், லெனின் போன்றோரின் மேற்கோள்களை மட்டுமே நம்பிக் கட்டுரை எழுதும் 'சமர்' போன்ற ஒரு பத்திரிகை என்னைத் திரிபுவாதி என்று குறிப்பிட்டதை நான் அசட்டை செய்து பதில் எழுதவில்லை. என்னைப் பொறுத்தவரை அவர்களைப் போன்ற ஒரு பத்திரிகைக்கு பதில் எழுதுவதனால் மேற்கோள்களை நிரப்பி எனக்கு ஒரு பதிலைத் தயாரித்து பத்திரிகை ஒன்றை வெளிக்கொண்டு வந்து விடுவார்களோ என்ற அச்சம் உள்ளது. அவர்களைப் பொறுத்தமட்டில் மேற்கோள்கள், ஆசான்கள், பத்திரிகை இவைதான் முக்கியமே ஒழிய விடயங்கள் அல்ல. தாம் பேசும், எழுதும், படிக்கும் கருத்துக்களை அவர்கள் அலசி ஆராய்ந்து பார்ப்பதில்லை. பாவம் அவர்கள். உண்மையிலே பரிதாபத்திற்குரியவர்கள்.

எந்த ஒரு பிரச்சனையை நாம் ஆராயும் போதும் அவற்றுக்கு மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோர் சொன்னவை என்ன? என்று பார்வையைத் தொடங்குவதும் அவர்கள் சொன்னவற்றுக்கு ஏற்றவாறு பிரச்சனையை ஏற்கனவே உள்ள ஒரு சட்டகத்துக்குள் அடக்க முனைவதும் தவறு. இந்த அணுகுமுறையானது பிரச்சனையைப் பற்றிய அறிவை நாம் பெறுவதற்கோ அன்றிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கோ ஒருபோதும் உதவமாட்டாது. சில அறிஞர்கள் சொன்ன பொதுவான விதிகளை நாம் பிரச்சனைகளை ஆராயும் போது உதவிக்குப் பயன்படுத்தலாம். அதற்கு மாறாக அந்த விதிகளுக்கு ஏற்றவாறு பிரச்சனையைக் காட்ட முனையக் கூடாது.

சோவியத் புரட்சியின் தோல்விக்கு வெறுமனே லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் மட்டுமே காரணமென்று நான் கருதவில்லை. உள்நாட்டு யுத்தம், பின்தங்கிய பொருளாதாரம், ஆரம்ப காலக் கட்சி ஊழியர்களைக் கட்சி இழந்திருந்தமை, அதிகாரத்தில் இருந்தவர்கள் புரட்சியின்பின் கட்சியில் ஒட்டிக்கொண்டமை, ஏகாதிபத்தியங்களின் யுத்த நெருக்கடி இப்படி பல காரணங்களைப் பலரும் முன்வைக்கின்றனர். அவற்றுக்குப் பல நியாயங்களைத் தமது தரப்புக்கு ஆதரவாக முன்வைக்கின்றனர். இவற்றுடன் லெனினிய அரசு, கட்சி பற்றிய கோட்பாட்டிலும் தவறு உள்ளது என்பதே என் கருத்து.

உலகெங்கும் பெரும்பான்மையாக உள்ள புரட்சிகரக் கட்சிகள், குழுக்கள் தமது பெரும்பான்மை நிலைப்பாடுகளை போல்சேவிக் கட்சியில் இருந்தே பெற்றுக்கொண்டன. போல்சேவிக் கட்சியின் முக்கிய சித்தாந்தவாதியான லெனின் தலைமையிலேயே அதன் சித்தாந்தங்கள் உருவாக்கப்பட்டன. அதனாலேயே உலகெங்கும் உள்ள பெரும்பான்மையான புரட்சிகரக் கட்சிகள், குழுக்கள் தாம் லெனியக் கட்சிக் கோட்பாட்டை கடைப்பிடிப்பதாக தம்மை இனங்காட்டுகின்றன. அக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்கு உள்ளாக்கவேண்டிய தேவை உள்ளது. அதனாலேயே லெனியக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்குள்ளாக்க வேண்டும் என்கிறேன்.

லெனினியக் கட்சிகளின் கோட்பாடுகள், நடைமுறைகளுக்குள் ஊடுருவியிருக்கும் பொருளாதார வாதத் தன்மைக்கு எதிராக அவை பலமுறை விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான ஆன்மீகப் பண்புகளை (ஆன்மீகம் = கடவுள் என எடுத்துக்கொள்ள மாட்டீர்கள் என நம்புகிறேன்) வளர்த்துக் கொள்வதற்கு லெனினியக் கட்சிகள் போதிய கவனம் செலுத்தவில்லை. இந்த விடயத்தில் போல்சேவிக் கட்சியிலிருந்து மிகவும் மாறுபட்ட தன்மையைக் கொண்டிருந்ததாலேயே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு கலாச்சாரப் புரட்சியையாவது நடத்த முன்வந்தது. லெனினியக் கட்சிக்குள் ஊடுருவியிருக்கும் பொருளாதார வாதக் கண்ணோட்டங்களுக்கு எதிராகவும் நான் இங்கு எதுவும் எழுதவில்லை.

இங்கு லெனினியக் கட்சிக் கோட்பாடுகள், நடைமுறைகளில் காணப்படும் முக்கிய மூன்று குறைபாடுகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அவையாவன:-

1) லெனினியக் கட்சி அமைப்பு வடிவம், ஊழியர்களுக்கிடையேயான உறவு.
2) அரசு - கட்சி உறவு பற்றிய நிலைப்பாடு.
3) கட்சி - சிவில் சமூக நிறுவனங்களுக்கிடையேயான உறவு.

மேலே குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் பல வருடங்களாகப் பாரிய மாற்றம் எதுவும் இல்லாமல் இறுகிய நிலைப்பாட்டையே லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் கொண்டுள்ளன. நடந்து முடிந்த எத்தனையோ புரட்சிகள் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியாமல் தேக்க நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடைந்த போதும் இந்த விடயங்களில் எந்த ஒரு மாற்றமும் நடைபெறவில்லை. தொடர்ச்சியான புரட்சிகளை நடத்திச் செல்ல வேண்டிய ஒரு புரட்சிகர ஸ்தாபனம் இந்த விடயங்களில் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

1) கட்சி அமைப்பு வடிவமும் ஊழியருக்கிடையிலான உறவும் :-

இதுவரை காலமும் நிலவிவந்த லெனினியக் கட்சி அமைப்பு வடிவம் செயலாளர், அரசியல் குழு, மத்திய குழு, ஏனைய செயற்குழுக்கள், அமைப்பாளர் கிளைகள் என்ற வடிவத்திலுள்ள மிகவும் இறுக்கமான மத்தியப்படுத்தப்பட்ட வடிவத்தையே கொண்டுள்ளது. கம்யூனிசத்தை இலட்சியமாகக் கொண்ட புரட்சிகரக் குழுக்கள், கட்சிகள் எவையும் தமது ஊழியர்களில் பெரும்பான்மையானவர்களை கம்யூனிஸ்ட்டுக்களாகக் கொண்டிருப்பதில்லை. மாறாக அதன் ஊழியர்கள் கம்யூனிஸ்ட்டுக்களாக வளரவேண்டும். அதற்கேற்றவாறு ஸ்தாபனக் கட்டமைப்பை ஸ்தாபனங்கள் கொண்டிருக்க வேண்டும். முக்கியமாக ஊழியர்கள் ஸ்தாபனங்கள் மூலமாகத் தமது சொந்த நலன்களை அடைவதை இல்லாதவாறு செய்யக் கூடிய கட்டமைப்பை, விதிகளை ஸ்தாபனம் கொண்டிருக்க வேண்டும். இங்கு நான் சொந்த நலன்கள் என்று வெறும் பொருளாதார நலன்களை மட்டும் குறிப்பிடவில்லை.

லெனினியக் கட்சிகள், ஸ்தாபனங்கள் கூட்டுத் தலைமை உடையன என்று பிரகடனப் படுத்தினாலும் நடைமுறையில் அது உண்மையல்ல. நடைமுறையில் அங்கே தனிநபர் அதிகாரங்களே நிலவின, நிலவுகின்றன. லெனினியக் கட்சியின் தலைமைக்கு ஒருவர் வருவாராயின் அவருக்கு எதிராக ஒரு கவிழ்ப்பு நடந்தால் ஒழிய அவர் சாகும்வரை தலைவராக இருந்தே சாவார். இதற்கு லெனின், ஸ்டாலின், மாவோ, சண்முகதாசன் போன்ற எத்தனையோ பேரை நாம் உதாரணமாகக் காணலாம். ஒருமுறை தலைமையிலிருந்த அங்கத்தவர்கள் கீழே இறங்கிப் போய் கீழ் அணிகளில் வேலை செய்வதற்குரிய ஸ்தாபன அமைப்பு விதிகள் அங்கே இல்லை, எந்த ஒரு நபரும் நீண்ட காலம் மேல்மட்ட பொறுப்புக்கள் மட்டுமே செய்து கொண்டிருக்க முடியாதவாறு புதிய விதிகள் உருவாக்கப்பட வேண்டும். எந்த ஒரு நபரும் தனக்குத் தரப்பட்ட உயர்மட்டப் பொறுப்புக்கள் தான் மீண்டும் கீழ் மட்டத்திற்கு சென்று வேலை செய்வதிலிருந்து தன்னைக் காப்பாற்ற மாட்டாது என்று உணரவேண்டும். அதற்குரிய விதிகள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஒருவர் தனது சொந்த நலன்களைத் தான் சார்ந்த ஸ்தாபனத்தினூடாக அடைவதை தடுப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்த முடியும். ஆக, அதிகாரங்களை உடைய பொறுப்புக்களை ஸ்தாபனத்தின் தனிநபர்கள் குறிப்பிட்ட காலமே வகிக்கக் கூடியவாறு விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

தகுதியும் திறமையும் உடையவர்கள் ஸ்தாபனத்தின் உயர் பொறுப்புக்களை ஏற்பது நல்லதுதானே என்று சிலர் வாதிடலாம். மாறாக தகுதியும் திறமையும் உடையவர்கள் ஸ்தாபனத்தின் உயர் பொறுப்புக்களை வகித்தால் மட்டுந்தான் தமது திறமையைக் கட்சிக்கு வெளிப்படுத்துவார்களா? கீழ் அணியில் இருந்து தமது பங்களிப்பை வழங்கமுடியாதா?

லெனினியக் கட்சியமைப்பில் காணப்படும் தலைவர், செயலாளர், மத்திய குழுத் தலைவர், அரசியல் குழுத் தலைவர், அமைப்பாளர் போன்ற தனிநபர் அதிகாரம் கொண்ட பதவிகள் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். இவர்கள் ஏற்ற பொறுப்புக்களைக் கூட்டு வேலைமுறைக்கு உட்படுத்த வேண்டும். தனிநபர் மட்டுமே நிர்வகிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்ற அதிகாரமுள்ள பொறுப்புக்களைக் குறிப்பிட்ட காலத்திற்கே ஒருவர் வகிக்கக் கூடியவாறு செய்தல் வேண்டும். பெரும்பான்மையான ஸ்தாபனத்தின் முக்கிய விடயங்களில் கூட்டு வேலை முறையை உறுதி செய்து கொள்ள வேண்டும். தனிநபர் வேலைமுறையை அனுமதிக்கும் பட்சத்தில் நீண்டகாலத்திற்கு ஒருவருக்கு அதிகாரங்கள் இருப்பதை அனுமதிக்கக் கூடாது.

கம்யூனிஸ்ட் கட்சிகள், புரட்சிகர ஸ்தாபனங்கள் என்பவற்றுக்குள் கூட்டுத் தலைமை, கூட்டு வேலைமுறை என்று கூறிக்கொண்டு கொலைகள் செய்தலும் காங்கிரசுகளைக் கூட்டாமல் விட்டதும், மத்திய குழு, அரசியல் குழு போன்றவற்றில் தனக்கு சார்பானவர்களை மட்டுமே அனுமதித்ததும் கடந்த காலத்தில் சில தனிநபர்கள் செய்தவை. இது வெறுமனே அந்த தனிநபர்களின் தவறு மட்டுமல்ல, அந்த ஸ்தாபனக் கட்டமைப்பிலுமுள்ள தவறாகப் பார்க்க வேண்டும். இந்தக் கட்டமைப்பு வேலை முறையில் பாரிய மாற்றம் செய்ய வேண்டும்.

2) புரட்சிகர ஸ்தாபனம்-அரசு ஆகியவற்றிற்கிடையேயான உறவு :-

அரசுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான மதிப்பீட்டில் அரசை வெறுமனே வர்க்கங்களின் கருவியாக மட்டுமே கணிதத் தேற்றம் போல் பிரேரகிப்பது தவறு. அரசுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான உறவு மிகவும் சிக்கலானது. பொருளாதார வளர்ச்சி குன்றிய பல நாடுகளில் அரசு வர்க்கங்களின் கருவியாக செயற்படுவதற்கு மாறாக, அரசுக்கு தகவமைந்து வர்க்கங்கள் இயங்க வேண்டிய தேவை உள்ளது. இவை இரண்டிற்கும் இடையிலான உறவை ஒன்றின் கருவி மற்றொன்று என்று நேரடியாக பார்ப்பது தவறு. எளிமையான, நேரடியான கணிதத் தேற்றம் போல் நிகழ்சிகள் நடைபெறுவதில்லை. அதுபோலேவே இவற்றுக்கிடையிலான உறவும்.

இன்றைய காலகட்டத்தில் சிறீலங்கா போன்ற நாடுகளில் அரசு என்பது வர்க்கங்களின் மேல் தீர்மானகரமான பங்கைச் செலுத்தக் கூடிய நிறுவனம். அங்கே அரசு என்ற இயந்திரத்தின் மீது வர்க்கங்கள் காத்திரமான பங்கை ஆற்றிவிட முடியாது. அரசுகள் தமக்கு தகவமைந்த வர்க்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டமைப்பை உருவாக்குவதற்கு மிகச் சிறந்த உதாரணம் சோவியத் யூனியன். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி அரசு ஏற்கனவே அதிகாரத்தைக் கொண்டிருந்த வர்க்கங்களை இல்லாது ஒழித்து புதிய வர்க்கக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முனைந்ததை நாம் அவதானிக்க முடிந்தது.

சில சமுதாயங்களில் வர்க்கங்கள் அரசின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் சில சமுதாயங்களில் அரசுகள் வர்க்கங்களின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் நாம் அவதானிக்கலாம். ஆக, அரசுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான உறவை சிக்கல் நிறைந்த பரஸ்பர வினையாக எடுத்துக் கொள்வதே சரி என்று படுகிறது. எதுவும் எதன்மீதும் நேரடியான ஆதிக்கம் புரிவதில்லை என்று நாம் கொள்ள வேண்டும்.

செய்யப்பட வேண்டியது வர்க்கப் போராட்டம் மட்டுமா? அரசு என்ற, சமுதாய வளர்ச்சிக்குத் தடையான இயந்திரத்திற்கு எதிரானது இல்லையா? ஆம், சமுதாய வளர்ச்சிக்கு எந்தெந்த சக்திகள் தடையாக இருக்கின்றதோ அந்தந்த சக்திகளுக்கு எதிராக போராடுவதுதான் புரட்சிகர நடைமுறை. வர்க்கப் போராட்டத்தின் போது அல்லது கம்யூனிச சமுதாயத்தில் அரசு உலர்ந்து உதிர்ந்து விழும் என்கிறார்கள். அது நடைபெறவில்லை. அரசு தானாக உலர்ந்து உதிர்ந்து விழமாட்டாது. உலர்ந்து உதிர்ந்து விழுவது என்பது தனக்குள்ளேயே நடக்கும் மாற்றத்தைக் குறிக்கின்றது. அரசு இயந்திரம் என்பது தனக்குள்ளேயே நடக்கும் மாற்றத்தால் இல்லாது ஒழிந்து போகமாட்டாது. மாறாக வெளிச்சக்திகளின் செயற்பாட்டினாலேயே இல்லாது ஒழிக்கப்படும். சமுதாய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் வர்க்கங்களுக்கு எதிராக எப்படி சரியான சக்திகள் நிறுத்தப்படுகிறதோ அதேபோன்று சமுதாய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் அரசு இயந்திரத்திற்கு எதிராகவும் சரியான சக்திகள் நிறுத்தப்பட வேண்டும்.

அரசு என்ற, சமுதாய வளர்ச்சிக்கு தடையாக உள்ள இயந்திரத்திற்கு எதிராக நாம் ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தை முன்னிறுத்த வேண்டும். இதுவரை காலமும் லெனினியக் கட்சிகள் அரசு இயந்திரத்தைக் கைப்பற்றுவதை அல்லது தமக்குச் சாதகமான அரசு இயந்திரத்தை நிறுவுவதை திட்டமாக கொண்டே செயற்பட்டன. அரசு இயந்திரம் ஒன்றைக் கைப்பற்றிய பின் சோசலிச அரசு, புரட்சிகர அரசு, ..... இப்படிப் பல அர்த்தங்களைத் தமது அரசுக்கு சொன்னார்கள். அது தானாக மடியும் என்று சொன்னார்கள்.அதுவும் நடைபெறவில்லை. மாறாக முன்னாள் புரட்சிகர சக்திகள் ஆரம்பத்தில் அதனைப் பலப்படுத்தினார்கள். பின்பு அரசு இயந்திரம் அவர்களைக் காப்பாற்றியது.

அரசை நல்ல சிந்தனையுடைய புரட்சியாளர்கள் கைப்பற்றினால் அல்லது உருவாக்கினால் பின்பு அது அழியும் என்பது வெறும் கற்பனாவாதமே அன்றி வேறென்னவாக இருக்க முடியும்? அரசு என்பது வன்முறை சார்ந்த, வன்முறை சாராத நிறுவனங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. சமுதாயத்தில் நிலவும் அமைப்பு முறையைக் காப்பாற்ற அரசுக்கு பக்கபலமாக சார்பாகக் கருத்தியலை உருவாக்க சிவில் சமூக நிறுவனங்கள் உள்ளன.

ஆக, சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சகல அம்சங்களுக்கும் எதிராக போராடும் போது அரசு இயந்திரத்துக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது. ஆகவே ஒரு புரட்சிகர ஸ்தாபனமானது ஒரு அரசைக் கைப்பற்றவோ அன்றி அரசு போன்ற ஒரு நிறுவனத்தை உருவாக்குவதையோ திட்டமாகக் கொண்டு போராடக் கூடாது. எப்பவுமே புரட்சிகர ஸ்தாபனம் அரசு என்ற இயந்திரத்திற்கு எதிரானதாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். ஏற்கனவே நிலவிவந்த அரசின் வன்முறை இயந்திரம் ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தால் அழிக்கப்படுமாயின் ஓர் அரசை அமைப்பதற்கான வாய்ப்பு புரட்சிகர ஸ்தாபனத்திற்கு கிடைக்கிறது. அந்த சந்தர்ப்பத்திலும் ஓர் அரசை நாம் அமைக்காமல் சமுதாயத்தில் நிலவும் ஏனைய சக்திகளைக் கொண்டு தேவையான அரசு நிறுவனங்களை அமைக்க அனுமதிக்க வேண்டும். அவை சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடையாகும் போது அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

இதனை சிலர் அராஜக வாதம் என்று முத்திரை குத்தலாம். அரசைப் புரட்சிகர சக்திகள் கைப்பற்றக் கூடாது, அதனை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று கூறும்போது சமுதாயத்துக்கு அத்தியாவசியமான நிர்வாகத் தேவைகளை யார் செய்வது? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. சமுதாயத்தில் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தேவையான நிர்வாக அமைப்புகள் நிறுவப்பட வேண்டும், நிர்வகிக்கப்பட வேண்டும். மாறாக அது இன்றைய இறுகிய மையப்படுத்தப்பட்ட வடிவத்தில் இருக்கக் கூடாது. உதாரணமாக நீதிமன்றமும், சிறைச்சாலையும் இதுவரைகாலமும் அரசு என்ற ஒரு நிறுவனத்தின் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும். நீதிமன்றம் மக்களிடமும், சிறைச்சாலை நிர்வாகத் துறையிடமும் மாற்றியமைக்கப்பட்டு இன்றைய மையப்படுத்தல் இல்லாது செய்தல் வேண்டும். இதுவரை காலமும் நிலவிவந்த பொலிஸ், இராணுவ அமைப்பு முறைகள் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். ஓர் புரட்சியின் பின்பு பொலிஸும், இராணுவமும் மையப்படுத்தப்படாத ஓர் அமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இவை இரண்டும் உதாரணங்களே. இதுவரை காலமும் சோசலிசக் குடியரசுகளில் நிலவிவந்த அரசு வடிவமோ அன்றி லெனினியக் கட்சிகளின் கற்பனையில் உள்ள அரசு இயந்திரமோ மிகவும் இறுகிய மையப்படுத்தப்பட்ட அரசு வடிவமாகும். இப்படிப்பட்ட ஒரு இயந்திரத்தை உருவாக்கி சமுதாயத்தை ஒருபோதும் தொடர்ச்சியான புரட்சிகளை நடத்தி முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியாது.

ஒரு புரட்சிகர ஸ்தாபனம் சமுதாயத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள சக்திகளை அழிப்பது, சமுதாயத்தை நிர்வகிப்பதற்கு தேவையான நிறுவனங்களை உருவாக்குதற்கு உதவுவது, அவற்றைக் கண்காணிப்பது, சமுதாயத்தினை மேலும் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லக் கூடிய முன்முயற்சிகளை எடுப்பது போன்ற பணிகளைச் செய்ய வேண்டும். மாறாக அரசு போன்ற இறுகி மையப்படுத்தப்பட்ட இயந்திரத்தின் மூலம் சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லலாம் என்று கருதினால் அது நடைபெறாது. மாறாக தொடர்ச்சியாக புரட்சியை நடத்த வேண்டிய ஸ்தாபனம் எந்த ஒரு புரட்சியையும் நடத்தாமல் சமுதாயத்தில் குழப்பங்கள் வராதவாறு நிர்வகிக்க முயற்சிக்கும். அது ஒரு தேக்கமடைந்த சமுதாயத்தையே விரும்பும். அதற்கு கடந்த காலத்தின் சிறந்த ஓர் உதாரணம் சோவியத் யூனியன் ஆகும்.

ஆக, ஒரு புரட்சிகர ஸ்தாபனம் அரசு என்ற ஒன்றைக் கைப்பற்றாமலும் உருவாக்காமலும் புரட்சிகளை தொடர்ச்சியாக செய்ய வேண்டும். சமுதாயத்திற்கு தேவையான நிர்வாக அமைப்புக்களை நிராகரிப்பது என்பது இதன் அர்த்தமல்ல. அந்த நிர்வாக இயந்திரங்கள் மேல் ஒருவகை மேலாண்மையை புரட்சிகர ஸ்தாபனம் கொண்டிருக்கலாம், அந்த நிர்வாக இயந்திரத்தை முற்றாக இயக்குவது என்பது தவறானதாகும்.

### 3) புரட்சிகர ஸ்தாபனத்துக்கும் – சிவில் சமூக நிறுவனங்களுக்கும் இடையிலான உறவு

ஒவ்வொரு சமுதாயமும் வெறுமனே அரசு என்ற ஒன்றால் மட்டும் இயக்கப் படுவதில்லை. அவை தமக்கே உரிய சிவில் சமூக நிறுவனங்களைக் கொண்டு கருத்தியலையும் உருவாக்கிக் கொள்கிறது. கருத்தியல் என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் இயக்கத்திற்கும் அவசியமாகும். குறிப்பாக ஒரு சமுதாயத்தின் சீரான இயக்கத்திற்கு கருத்தியல் அவசியமாகும்.

இந்த சிவில் சமூக நிறுவனங்கள் சீரான இயக்கத்திற்குட்பட்ட சமுதாயத்தில் திறம்பட செயற்படும். சிவில் சமூக நிறுவனங்கள் நிலவும் சமுதாயத்தில் பாரிய மாற்றங்கள் நடைபெறுவதற்கு தடையானவை. சமுதாயத்தில் கொந்தளிப்பான புரட்சிகரமான காலகட்டங்களில் சிவில் சமுதாய நிறுவனங்கள் தமது பாத்திரத்தை இழக்க, அரசும் அதன் வன்முறை இயந்திரமும் நிலவும் சமுதாய அமைப்பைக் காக்க முன்னிலைக்கு வருகின்றன. அரசே சில சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்குகின்றது, நிர்வகிக்கின்றது. சமுதாயத்தில் கொந்தளிப்பான காலகட்டத்தில் அரசை எதிர்த்து நிற்கும் சக்திகள் சமுதாயத்தின் பாய்ச்சலுக்கு சாதகமான சக்திகள் புரட்சிகர சக்திகளாகும். சிவில் சமூக நிறுவனங்கள் சமுதாயத்தின் புரட்சிகரமான காலகட்டங்களில் காத்திரமான பங்கை ஆற்றுவதில்லை. அவை செயலிழக்கும்.

பொதுவாக இந்த புரட்சிகர சக்திகள், நிறுவனங்கள் புதிய அரசு அதாவது தமது அரசு நிறுவப்பட்டவுடன் அன்றைய அதனது சமுதாயத்தை பரிணாம வளர்ச்சிக்கு உட்படுத்தவே முனையும். அதற்காக அந்த சமுதாய பரிணாம வளர்ச்சிக்கு தகவமைத்த சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்க முனையும். சீரான இயக்கத்துக்கு உறுதுணையாக இருக்கும் சிவில் சமூக நிறுவனங்களுடன் சேர்ந்து ஒரு புரட்சிகர ஸ்தாபனம் தேக்க நிலையடைவதுடன் சமுதாயத்தையும் தேக்க நிலைக்கு தள்ளுகிறது. சமுதாயம் பரிணாம வளர்ச்சிக்குட்பட்ட காலகட்டங்களில் சில சிவில் சமூக நிறுவனங்கள் காத்திரமான பங்கை ஆற்றுவதை மறுப்பதற்கில்லை.

ஒரு புரட்சிகர ஸ்தாபனம் தனக்கு தகவமைந்த சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்குவதைத் தவிர்த்துச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு சாதகமான சிவில் சமூக நிறுவனங்கள் உருவாவதை ஆதரிக்க வேண்டும். சிவில் சமூக நிறுவனங்களின் தவறான கருத்துக்கள், நடைமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டும். சமுதாயத்தின் புரட்சிகரமான காலகட்டங்களில் ஈடுகொடுக்க முடியாத சிவில் சமூக நிறுவனங்கள் அழியும். அப்போது புதிய சிவில் சமூக நிறுவனங்கள் உருவாகும். அவை உருவாவதற்கு ஒரு புரட்சிகர ஸ்தாபனம் உதவ வேண்டும். மாறாக அவற்றை தமது நிறுவனங்கள், கிளைகள் போல் பாவிக்க முனையக் கூடாது.

ஒரு புரட்சிகர ஸ்தாபனமானது அரசு என்ற ஒன்றை கைப்பற்றுவதாயின் அது தனக்கு சாதகமான சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்க முனையும். அரசு என்பது சிவில் சமூக நிறுவனங்களுக்குப் பின்னால் நின்று செயல்பட முனையும்.

ஆக, ஒரு புரட்சிகர ஸ்தாபனமானது அரசு என்ற ஒன்றைக் கைப்பற்றுவதற்காகப் போராடாமல் தொடர்ச்சியான புரட்சிகளை நடத்தி சமுதாயத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகப் போராட வேண்டும். அது தனக்குச் சாதகமான சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்க முனையக் கூடாது. சிவில் சமூக நிறுவனங்களுடன் ஜனநாயக ரீதியில் உறவைக் கொண்டிருக்க வேண்டும், அவற்றில் சமுதாய வளர்ச்சிக்கு சாதகமானவற்றை ஆதரிக்கும், எதிரானவற்றை எதிர்க்கும். மேலும் இன்றைய மத்தியப்படுத்தப்பட்ட தனிநபர் தலைமையை உடைய இறுகிய ஸ்தாபனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும்.

மாறன்! நான் உவ்விடமிருந்து இக் கடிதத்திற்குப் பதில் எதிர்பார்க்கிறேன். லெனின் அதைச் சொன்னார், மாவோ இதைச் சொன்னார் என்று பதில் எழுத வேண்டாம். பதில் எழுதுவதாக இருந்தால் "கரிகாலன்! பிரச்சனை இப்படி இருக்கிறது, நீர் பிரச்சனையை இந்த இந்த முறைகளில் பார்ப்பது தவறு, அதற்கான காரணங்கள் இவை இவை..." என்ற முறையில் பதில் எழுதுவீர் என்று நம்புகிறேன்.

வேறு என்ன? மிகுதி உமது பதில் கண்டு. ........

http :\\ www. thamizham. net

அன்புடன்,

கரிகாலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை :

# அடங்கிப்போகும் உணர்வுகள்

– சுருதி

நல்ல இதமான குளிராக இருக்குது.
நல்ல காத்தும் வீசுது. மழைவரப்
போகுதோ. ஒரே இரைச்சல்... ம்!
இண்டைக்கு காத்தோட மழை
வரப்போகுது. என்ன இப்பிடி
காத்தடிக்குது.
இண்டைக்கு காகோலை கங்குமட்டை
எல்லாம் விழுந்திருக்கும். பொறுக்கப்
போகவேணும்.
எழும்பவே பஞ்சியாக கிடக்கு.
என்னை ஒருத்தரும் எழுப்பக்கூடாது.
நான் கண்ணை மூடிக்கொண்டு
நித்திரை கொள்ள வேணும். ஒருத்தரும்
எழுப்பக் கூடாது. ஐயோ, நல்லா
இழுத்து போத்துக் கொண்டு நித்திரை
கொள்ள வேணும். என்ன சுகமான
குளிர்.

இதேன் நித்திரை குளம்புது. ம்... இனி
கண்ணை முழிச்சா நித்திரை வராது.
ம்! நித்திரையும் போட்டுது. அட, நான்
கண்டது கனவா. அதென்ன கண்ணை
முழிச்சு முழிச்சு கனவு. அப்ப அந்த
பனையோலை இரைச்சல் கார்
இரைச்சலா.
கொஞ்ச நேரத்துக்குள்ள ஒரு சுகமான
நித்திரை. ஊர்ல மண் வீட்டில நித்திரை
கொண்ட சுகம்.
அது திரும்ப வருமா??
அந்த கனவு திரும்ப வருமா?

இதை யாரிட்டயாவது சொல்ல
வேணும் போல இருக்கே. என்னை
விசர் எண்டு சொல்லுதுகளோ
தெரியாது.
ஆரிட்ட சொல்ல.... மகனிடம்
சொல்லவா....
அவனுக்கு என்ன தெரியப் போகுது.
பனையோலை இரைச்சலா
தெரியப்போகுது. இந்தக் கார்களையும்
மாடிக்கட்டிடங்களையும் மலையையும்
அப்பிள் மரத்தையும் தான் தெரியும்.
நான் பனையோலை...பனை...
எண்டால் என்னத்தைத் தெரியும்.



இந்த சுகமான கனவை யாரிட்டை
சொல்ல. அவர் வேலையால வரட்டும்.
அவரிட்ட சொல்வமா?
ம்.... வேண்டாம். அவருக்கு நல்லா
விளங்கும்.
இதைச் சொன்னால்.... உனக்கு
எப்பவும் பனங்கொட்டை பொறுக்கின
நினைப்புத்தான் எண்டு பதில் வரும்.
எங்கேயோ கிடந்ததை எங்கேயோ
கொணர்ந்து வச்சா.... எண்டு பதில்
வரும்.
இதைவிட பேசாம இருக்கலாம்.

அதுசரி இவ்வளவு காலமும் இல்லாம
இப்ப என்னண்டு இந்த கனவு
வந்தது. நாட்டுக்கு போவம் எண்டு
நினைத்ததாலா.
ம்..... இருக்கலாம்.

இங்க இருந்து இவரோட சீரழிந்த
வாழ்வை யோசித்ததாலா.
எனக்கு ஏன் அழுகை வருது.
சும்மா அழுது அழுது என்னையும்
மூட்டாளாக்கினதுதான் மிச்சம். அப்ப
யாரிட்டை போய் சொல்றது. இந்த
வெக்கக்கேடான என்ர வாழ்கையை.
காதலிக்கும் போது என்ன
சந்தோஷம்.... இப்ப ஒவ்வொரு
வார்த்தையும் விசம்.

இப்ப ரீ குடிச்சா எப்பிடி இருக்கும்....
யாராவது வைத்து தரமாட்டார்களா??
'சோகேசிலை' அடுக்கி
வைச்சிருக்கிற 'கப்பில்' ஊத்திக்
குடிக்க வேணும் போல இருக்கு......
வேண்டின உடன அடுக்கி வைக்க
வடிவாக இருந்தது. இப்ப பார்த்து
பார்த்து பழசாப்போட்டுது.

டொக்டரிட்டை போய் பிள்ளையையும்
இரண்டு பேருடைய இரத்தத்தையும்
'செக்' பண்ணியாச்சு. பிள்ளை
உங்களுக்குத்தான் பிறந்தது எண்டு
நிரூபிச்சாச்சு.
எவ்வளவோ நடந்து முடிஞ்சிட்டுது.
சந்தேகம்... எல்லாம் சந்தேகம்....
பக்கத்து றூம் பெடியனோட கதைச்சா
சந்தேகம். கல்யாண வீட்டுக்கு நல்ல
வடிவா வெளிக்கிட்டு போயிற்று. வீட்ட
வந்து சேர்றதுக்குள்ள அடி. உன்னை
அவன் பார்த்தான்.... இவன்
பார்த்தான்.... எண்டு.

இதென்ன நான் சொந்தக்
காரரோடையும் கதைகிறதில்லையா.
இது படிச்சகும் அறிவில்லை.
படிப்பறிவில்லாத எத்தனையோபேர்
கல்யாணம் கட்டி நல்லாக
வாழயில்லையா.
படிச்சதுகளுக்குத்தான் கள்ளப்
புத்தியும் கள்ள எண்ணமும்.
ஒவ்வொரு தரமும் கையும் முகமும்
வீங்கி இருந்தால்... எத்தனை தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதவு இடிச்சது எண்டு சொல்லி
சமாளிக்கிறது.
என்னைப் பார்க்கிறவயளின்ரை
பார்வை 'அரைப்பெக்கோ நீ' எண்டு
சொல்லும்.

இவங்கட வாழ்க்கை முறை வேறை,
எங்கட வாழ்க்கை முறை வேறை.
என்னை மாதிரி எண்டால்.....
இவளவை விட்டிட்டு
போய்விடுவாளவை.

எங்களின்ரை சண்டையாலை
பிள்ளையின்ரை வாழ்கையெல்லோ
பாதிக்குது.
பிள்ளையின்ரை மூக்கு அவனை
மாதிரி இருக்கு... காது இவனை மாதிரி
இருக்கு....
தன்ரை பிள்ளையே அழுதாலும் தூக்கி
வைச்சிருக்க மனம் வராது.

இப்பிடி எல்லாம் நினைக்க எப்படி
மனம் வருது. நான் என்ன பாவம்
செய்தனான்.

இது நானாக தேடின வாழ்க்கை....
என்ன செய்வது...? அனுபவிச்சுத்தான்
ஆகவேணும். எல்லாச் சகோதரமும்
நீதானே தேடின வாழ்க்கை... நீயே
அனுபவி.... என்று சொல்லுவினம்.

இதையே யோசிச்சுக் கொண்டிருந்து
என்ன பலன். எழும்பினதில இருந்து
இதையே நினைச்சுக்
கொண்டிருக்கிறன். எத்தனை அலுவல்
கிடக்கு.
அவனும் எழும்பப் போறான்.....
எழும்பிக் கத்தப் போறான்....
எழும்பினவுடன தேத்தண்ணி வேணும்
அவரை மாதிரி.
மழையும் இன்னும் நிண்டபாடில்லை.
எழும்பி தேத்தண்ணியை வைப்பம்......



# கோஷ்டி யுத்தம் உச்சக் கட்டம் – அனுரா இடைநிறுத்தம் !

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நீண்ட காலமாக நிலவி வந்த தாய் – மகன் யுத்தம் அண்மையில் கட்சியிலிருந்து அனுரா இடைநிறுத்தப்பட்டவுடன் உச்ச நிலையை அடைந்துள்ளது. இரு அணிகளும் தத்தமது ஆதரவை காட்டிக் கொள்ளும் பலப் பரீட்சையில் இறங்கியுள்ளன. ஊர்வலம், கைபொம்ப வேட்டை, பொதுக்கூட்டம் எனப் பலப்பரீட்சை தொடர்ந்த வண்ணம் உள்ளன. அரசியல் ரீதியான அணுகுமுறைக்கு அப்பால் வன்முறையிலும் பலப்பரீட்சை காண்பிக்கப்படுகின்றன. சுதந்திரக் கட்சியின் தற்போதைய செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் வீட்டின் மீது குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 20.7.93 புதன் கிழமை அனுராவின் ஆதரவாளரான மேலின் சில்வா வீட்டுக்கும் குண்டு வீசப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு பக்கத்தில் தாயும் மகனும் பலப்பரீட்சையில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மறுபக்கத்தில் கட்சிக்குள் இருக்கும் நடுநிலைத் தலைவர்கள் சமாதான முயற்சிக்குள் இறங்கியுள்ளனர். இவர்கள் அனுராவை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறு வற்புறுத்தி வருகின்றனர். கட்சிகளின் விதிகளுக்கு மகன் என்பதால் மட்டும் விதிவிலக்கில்லை என்றும் அனுரா தன்னுடைய நடவடிக்கைகள் தொடர்பாக பகிரங்க மன்னிப்புக் கேட்டால் கட்சியில் சேர்த்துக் கொள்ளத் தயார் என்றும் தாயார் கூறியுள்ளார். ஆனால் அனுரா மன்னிப்பு கேட்கும் அளவுக்கு தான் கட்சிக்கு எவ்வித துரோகமும் செய்யவில்லை எனக் கூறி வருகின்றார்.

இரு அணிகளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை தங்கள் பக்கம் இழுப்பதிலேயே மும்முரமாக உள்ளனர். அனுரா தனது ஆதரவாளரான களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்ணான்டோ ஊடாக அரசாங்கத்தின் ஆதரவுடன் கட்சி மாறுவோருக்கு பாதுகாப்பு கொடுக்கும் சட்டத்தை கொண்டு வருவதற்கு முயற்சிசெய்து வருகின்றார். இச் சட்டம் நிறைவேற்றப்படுமாக இருந்தால் தனக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கட்சியிலிருந்து வெளியேறி புதுக் கட்சி ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். அச் சட்டம் நிறைவேறினால் கட்சியின் 67 பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் அனுராவுடன் நிற்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளது.

ஆனால் கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி அச் சட்டத்திற்கு ஆதரவு கொடுக்க அரசாங்க கட்சியினர் மறுத்துள்ளார்கள் எனத் தெரியவருகின்றது. தனது கட்சியைச் சேர்ந்தவர்களும் வேறு கட்சிகளில் சேர்ந்து விடுவார்கள் என UNP அஞ்சுவதே இதற்கு காரணமாகும். இப்போதுள்ள சட்டத்தின்படி யாராவது கட்சி மாறினால் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் இழந்துவிடுவர்.

UNP யின் இத்தகைய முடிவினால் SLFP பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுராவுடன் சேர்வதற்கு தயங்கி நிற்பது தெரிகின்றது. மொத்தத்தில் அனுராவின் நிலை சங்கடமான ஒன்றாகவே உள்ளது.

www.tamilarangam.net

# மலையக மக்களும் இ.தொ.கா வும்

– மலைமகள்

(2 ம் பகுதி)

இலங்கையில் இந்திய வம்சாவழி மக்களுக்கு எதிரான எதிர்ப்புவாதம் என்பது 1800 களின் நடுப்பகுதிகளில் அநாகரிக தர்மபால போன்றவர்களினால் தோற்றுவிக்கப்பட்டாலும் 1930 களின் ஆரம்பத்திலேயே உண்மையான அர்த்தம் பொருந்தியதாக வளர ஆரம்பித்தது. இவ் வளர்ச்சிக்கு வித்திட்டவர் பிரபல தொழிற்சங்க வாதியான A.E. குணசிங்காவே ஆவர். தொழிலாளர் சம்பந்தப்பட்ட விடயத்தில் இவரது இந்திய எதிர்ப்புவாதம் தொடக்கி வைக்கப்பட்டாலும் பின்னர் அவ் எதிர்ப்புவாதம் வர்த்தகத் துறை, அரசாங்க நிர்வாகத் துறை, நகரத் தொழிலாளர் தொழிற்சங்க இயக்கம், பாராளுமன்ற அரசியல் என 5 முனைகளை நோக்கி வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

அன்றைய காலகட்டத்தில் வர்த்தகத் துறையைப் பொறுத்தவரை இந்திய வம்சாவழியினரின் பிடி மிகவும் இறுக்கமானதாக இருந்தது. அதாவது 1945 இல் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் படி 750 செட்டி நிறுவனங்கள் 10 கோடி வங்கி மூலதனத்தை கட்டுப்படுத்தின. அன்று உள்ளூர் கடன் வங்கிகளாக இவையே செயலாற்றின. இதைத் தவிர மொத்த வணிகத்தில் 90 சதவீதமும் இடை வணிகத்தில் 60 சத வீதமும் சில்லறை வணிகத்தில் 40 சதவீதமும் இவர்களின் வசமே இருந்தது.

1930 வரை சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வர்த்தக மூலதனத்தைக் கொண்ட ஒரு அணி தோன்றியிருக்க வில்லை. 1930 களில் தான் அவை ஒரு அணியாக உருவாக ஆரம்பித்தன. இவ் அணி இந்தியர்களிடம் இருக்கும் வியாபாரச் சந்தையை தாங்கள் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இந்திய எதிர்ப்பு வாதத்தை கிளப்பி இந்திய வணிக மூலதனத்துடன் மோத ஆரம்பித்தது. இவர்கள் எழுப்பிய இந்திய எதிர்ப்பு வாதத்தின் இலக்கு இந்திய வர்த்தகர்களாக இருந்ததே தவிர தோட்டத் தொழிலாளர்களாக இருக்கவில்லை.

அரசாங்க நிர்வாகத் துறையில் கிளப்பி விடப்பட்ட இந்திய எதிர்ப்பு வாதம் அன்றைய காலகட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இடைமட்ட நிர்வாகிகளாகவும் கணிசமானளவில் தொழில் புரிந்த இந்திய மலையாளிகள் சமூகத்திற்கு எதிராகவே திருப்பி விடப்பட்டது. இதுபற்றி மேலோட்டமாக முதலாவது தொடரிலும் குறிப்பிட்டுள்ளேன். இலங்கை உயர்குலத்தில் தோன்றிவிட்ட ஆங்கிலம் படித்த சிறு கற்றோர் அணி அரச துறையில் இந்தியர்களை நீக்கிவிட்டு தான் அதில் அமர்ந்து கொள்வதற்காகவே இந்திய எதிர்ப்பு வாதத்தினை கிளப்பி விட்டிருந்தது. இதனைக் கிளறுவதில் ஆங்கிலம் கற்ற இலங்கையர்கள் தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடின்றி கைகோர்த்திருந்தினர்.

நகரத் தொழிலாளர் மத்தியில் கிளப்பப்பட்ட இந்திய எதிர்ப்பு வாதம் A.E. குணசிங்காவினாலேயே கிளப்பட்டது. ரயில்வே துறையிலும் வெள்ளவத்தை நெசவாலை போன்ற இடங்களிலும் பெரும்பான்மை இடத்தைப் பெற்றிருந்த இந்தியத் தொழிலாளர்களை நீக்கி அவ் இடத்தில் சிங்களத் தொழிலாளர்களை அமர்த்துவதையே இவ் எதிர்ப்பு வாதம் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதுபற்றியும் மேலோட்டமாக முதலாவது தொடரில் கூறியுள்ளேன்.

தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட இந்திய எதிர்ப்பு வாதம் இடதுசாரிகள் தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டி எழுப்பத் தொடங்கிய பின்னர் ஆரம்பமானது. இடதுசாரிகள் தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியபோது, இந்தியத் தொழிலாளர்கள் A.E. குணசிங்காவின் தொழிற்சங்கத்தை விட்டு இடதுசாரிகளின் தொழிற்சங்கத்தில் சேர ஆரம்பித்தனர். மலையக தொழிலாளர்களின் பிரதிநிதியாக அப்போது இருந்த நடேசையரும் இதனை ஆதரித்தார். இதனால் ஆத்திரமுற்ற குணசிங்கா அதுவரை காலமும் மறைமுகமாக இந்திய எதிர்ப்பு வாதத்தைப் பேசிய நிலையை மாற்றி வெளிப்படையாகவே பேச ஆரம்பித்து, தொழிலாளர் இயக்கத்தினுள் இனவாதம் வளர்வதற்கு காரணமாக விளங்கினார்.

இந்திய எதிர்ப்பு வாதம் கடைசியாக கிளப்பி விடப்பட்டது பாராளுமன்ற அரசியலில் ஆகும். இந்தியர்களுக்கு அரசியலில் உரிமை வழங்கப்படுமானால் அவர்களின் ஆதிக்கம் இலங்கையில் வளர்ந்து விடுமென்று கருதியே இவ் இந்திய எதிர்ப்பு வாதம் கிளப்பிவிடப்பட்டது. இவ் எதிர்ப்பு வாதத்தில் சிங்கள அரசியல் தலைவர்களோடு இலங்கைத் தமிழ்த் தலைவர்களும் கைகோர்த்தே இயங்கினர். இவ் அரசியல் உரிமை பறிப்பின் உச்சக் கட்டமாகவே 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டத்தையும் அதனைத் தொடர்ந்து வாக்குரிமைச் சட்டத்தையும் கொண்டு வந்தனர். ஏனைய நிலைகளில் ஏற்பட்ட இந்திய எதிர்ப்பு வாதம் மலையக தோட்டத் தொழிலாளர்களை பெருமளவு பாதிக்காத போதும் பாராளுமன்ற அரசியலில் ஏற்பட்ட இந்திய எதிர்ப்பு வாதம் மலையக மக்களையும் பாதிக்க ஆரம்பித்தது. ஏனையவர்கள் தங்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் ஏவிவிடப்பட்டபோது இந்தியாவுக்குச் சென்றோ அல்லது தமது பண வலிமையைப் பயன்படுத்தி கௌரவப் பிரஜாவுரிமை எடுத்தோ தற்காத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நீங்கள் மேலே காண்பது சுவிற்சர்லாந்தில் Zurich இல் இருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில் வந்த விளம்பரத்தின் ஒரு பகுதி. Restaurant ஒன்று ' கோப்பை கழுவும் வேலைக்கு தமிழர் தேவை ' என்கிறது இவ் விளம்பரம் !**

**ஐரோப்பிய நாட்டுத் தொழிலாளர்களினால் வெறுத்து ஒதுக்கப்படும் வேலையினை செய்வதற்கே வெளிநாட்டவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. விதிவிலக்காக குறைந்த வீதமான வெளிநாட்டவர்கள் இந் நாட்டவர் போல் தொழில் புரிகின்றனர். ஜேர்மனியில் துருக்கியத் தொழிலாளர்களே துப்பரவு செய்யும் தொழில்களில் பெரும்பான்மையாக ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல் சுவிற்சர்லாந்தில் இத்தாலிய, ஸ்பானிய தொழிலாளர்களே துப்பரவு செய்யும் வேலைகளை செய்து வருகின்றனர். இதேபோன்று இன்று கோப்பை கழுவும் வேலைக்கு தமிழர் என்ற நிலை !**

**சுவிற்சர்லாந்தைப் பொறுத்தவரை ஏராளமான தமிழர்கள் Restaurant களிலும், Hotel களிலும் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் குறைந்த ஊதியத்தில் கூடிய நேர வேலையை செய்து வருகின்றனர். இதனால்தானோ இம் முதலாளிகள் தமிழர்களை விரும்புகின்றனர் ???**

*கொள்ள, மலையக மக்கள் மாத்திரம் எவ்வித தற்காப்பு முயற்சிகளும் மேற்கொள்ள முடியாமல் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.*

*இவ்வாறு இந்திய வம்சாவழியினருக்கு எதிரான ஒடுக்குமுறைகள் கொழும்பிலிருந்து தோட்டத்துறை நோக்கி நகர்ந்து செல்ல, 1930 களில் இந்திய ஒடுக்குமுறைக்கு எதிராக எழுச்சியடைந்த இந்தியத் தேசியமும் மலையகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. ஒடுக்குமுறையின் உச்சநிலையில் 1939 இல் தோற்றம் பெற்ற இந்திய வம்சாவழியினரின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கை–இந்திய காங்கிரசும் தன்னை தற்காத்துக் கொள்ள கொழும்பிலிருந்து மலையகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. கொழும்பில் அதிக எண்ணிக்கையாக இருந்த இந்திய அரச உத்தியோகத்தர்களும் மலையான தொழிலாளிகளும் வெளியேறிவிட்ட நிலையில், தான் சார்ந்திருக்கும் இந்திய வணிக வர்த்தகர் அணியைக் காப்பாற்ற வேண்டுமாயின் தோட்டத் தொழிலாளர்களை இணைக்காமல் எதுவும் செய்யமுடியாது என இலங்கை–இந்திய காங்கிரஸ் கருதியது.*

*இதன் அடிப்படையிலேயே தோட்டத் தொழிலாளர் களுக்கென இலங்கை–இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத்தை நிறுவியதும் அல்லாமல் 1950 களில் தோட்டத் தொழிலாளர்களை மேலும் கவர வேண்டும் என்பதற்காக தனது அமைப்பின் பெயரையும் 'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்' என மாற்றிக் கொண்டது. இதன் பின்னரான காலம் முழுவதும் தான் சார்ந்திருக்கும் கொழும்பு வாழ் இந்திய வர்த்தகர்களின் நலன்களுக்காக மலையக தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை தாரைவார்க்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட ஆரம்பித்தது. உண்மையில் 1950 வரை இருந்த இலங்கை–இந்திய காங்கிரஸ் இந்தியத் தேசியத்தை வளர்ப்பதில் அக்கறையுற்று ஓர் தேசிய இயக்கமாக ஆவது தொழிற்பட்டது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தியத் தேசியத்தையும் கைவிட்டு இந்திய தரகு வர்த்தகர்களின் கூட்டத்திற்கு இந்தியத் தேசியத்தை அடகுவைக்கும் பணிகளிலேயே ஈடுபட்டது.*

*இலங்கை–இந்திய காங்கிரஸ் இந்தியத் தேசியத்தை வலியுறுத்தும் வகையில் 1944ம் ஆண்டு சோல்பரி குழுவினர் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கும் முகமாக வந்தபோது வாக்குரிமை, குடியுரிமை, பிரதிநிதித்துவம், நாட்டிற்கு திரும்ப வருதல், குடிவரவு என்பன அடங்கிய 5 கோரிக்கைகளை விசாரணைக் குழுவினர்முன் வைத்திருந்தது. அன்றைய காலகட்டத்தில் 16 வீதமாக இந்திய வம்சாவழியினர் இருந்தமையினால் 15 இந்தியர்களை பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளாக அனுப்ப வகைசெய்ய வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருந்தது. இறுதியில் 10 உறுப்பினர்களையாவது அனுப்பக்கூடிய அளவிற்கு கோரிக்கையை வென்று 1947 தேர்தலில் இவர்களிடையே ஒற்றுமை இல்லாததால் 7 உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உருமாற்றம் பெற்ற பின்னர் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப் பட்டபோது தான் சார்ந்திருக்கும் வர்த்தகப் பிரிவினருக்கு கௌரவ பிரஜாவுரிமையை எடுப்பதற்கு காட்டிய அக்கறையைக் கூட மலையகத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பெறுவதில் காட்டவில்லை. இதனை பிரஜாவுரிமைப் பறிப்பின்போது இது நடந்துகொண்ட முறையிலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.*

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் இந்த போலிப் பிரச்சாரம் ?

நானும் எனது நண்பர்களுமாக அண்மையில் ஜேர்மன் சென்றிருந்தோம். ஜேர்மன் செல்வதென்றால் ஒருவித பய உணர்வு. எங்கும் எப்பொழுதும் நாஜிகளின் தாக்குதலிற்கு இலக்காகலாம். இப் பயபீதியுடன் நாம் மூவரும் காரில் பயணம் செய்தோம்.

நெடுஞ்சாலைகளில் உள்ள உணவு விடுதிகளில் உள்ள அறிவிப்புப் பலகையில்
" வெளிநாட்டவரை வெறுக்காதீர் "
" வெளிநாட்டவரை நேசி "
என்ற கோசங்களடங்கிய சுவரொட்டிகளை அரசு ஒட்டுமளவிற்கு ஜேர்மனியில் இனவாத கொடுரங்கள் தலைக்குமேல் போய்விட்டது.

'சோலிங்கனில்' உறங்கிக் கொண்டிருந்த துருக்கிய சிறுமியுடன் துருக்கிய பெண்ணும் உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவத்தினை யாராலும் மறந்துவிட முடியாது. இச்சம்பவத்திற்குப் பின்னர் 70 ற்கும் மேற்பட்ட வெளிநாட்டவரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சோலிங்கன் வீடு எரிப்பின் போது பாதிக்கப்பட்ட இனத்தவரான துருக்கியர் புதிய நாஜிகளின் ஈவிரக்கமற்ற செயற்பாட்டைக் கண்டிப்பதற்காக தெருவிற்கு வந்தனர். இச் சம்பவம் ஜேர்மனியை ஒரு குலுக்கு குலுக்கியது.

ஜேர்மனியில் இனவாதம் அரசின் ஆதரவின்றி இந்த நிலைக்கு வரைவில்லை. 1991 ம் ஆண்டிலிருந்து விசேடமாக கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி CDF அகதிகளிற்கு இனிமேல் பணம் செலவழிக்க முடியாது. வெளிநாட்டவர்களிற்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியாது என வெளிநாட்டவர் மீதான தனது வெறுப்பை அள்ளிக் கொட்டியது. இவ்வகைப் பிரச்சாரங்கள் ஆயுதம் தாங்கிய புதிய நாஜிகளை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றது போல் ஆகிவிட்டது.

ROSTOCK இல் புதிய நாஜிக் குழுக்கள் ஒருங்கிணைந்து வெளிநாட்டவரின் வதிவிடத்தினை தாக்கி, தீவைத்த போது தீயணைக்கும் படையும் பொலிசாரும் உரிய நேரத்தில் ஸ்தலத்திற்கு வருகை தராது புதிய நாஜிகளிற்கு ஒத்துழைப்புக் கொடுத்தனர். இத் தாக்குதலின் போது புதிய நாஜிகளிற்கு அயலவர்கள் பூரண ஒத்துழைப்புக் கொடுத்திருந்தனர். இச்சம்பவத்தினையும் அமெரிக்க ஈராக் யுத்தம் போல் தொலைக்காட்சி நிறுவனங்களும் உடனுக்குடன் அஞ்சல் செய்திருந்தன.

" எம்முடன் வாழ்ந்து வந்த அயலவர்களை, இம் முற்றத்தில் துள்ளித் திரிந்த குழந்தைகளை வீட்டுடன் எரிக்கும் போது ஏன் காப்பாற்ற யாரும் முயலவில்லை "
என்று கேட்ட வண்ணம் அழுது கொண்டிருந்தாள் ஓர் ஜேர்மனியப் பெண்.

இவ்வாறு ஜேர்மனியில் பிரயாணம் செய்யும் போது ஜேர்மனியில் வெளிநாட்டவருக்கெதிராக நடைபெற்ற அட்டூழியங்களையும் அதன் போக்கினைப் பற்றியும் அளவளாவிச் சென்றிருந்தோம்.

இரண்டு நாட்களின் பின் ஜேர்மனியை விட்டு சுவிஸிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தோம். இதோ Zoll ஐ நெருங்கி விட்டோம். எமக்கு முன்னால் சென்ற கார்கள் மறிக்கப்படவில்லை. எனது நண்பன் சொன்னார், எம்மை கட்டாயம் சுங்க அதிகாரிகள் மறிப்பார்கள்... பார்! என்றான். நான் ஏன் எனக் கேட்டபோது, "எங்கள் நிறம் ......" என்றான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் அடுத்த பக்கம் நின்ற ஜேர்மனிய சுங்க அதிகாரி ஒருவன் வந்து, Sprechen Sie deutsch? (ஜேர்மன் கதைக்க முடியுமா?) என்று கேட்டான். ஆம்! என்று பதிலளித்ததும் காரை ஓர் ஒதுக்குப் புறமாக நிறுத்தும்படி கட்டளை இட்டான். ஓர் அரை மணி நேரமாக எமது காரினை சோதனையிட்ட பின்னர், எம்மை ஓர் அறைக்குள் கூட்டிச் சென்று உடம்பு முழுவதும் ஆராய வெளிக்கிட்ட போது.....
நான் இடைமறித்து,
" ஏன் என்றுமில்லாதவாறு எம்மை சோதனை செய்கிறாய் ? "எனக் கேட்டபொழுது,
உஷ்! சத்தம் போடாதே என்றான்.

நான் மறுபடியும் கேட்டேன்...
"கதைப்பதற்கு கேட்பதற்கு உரிமையில்லையா?"
அவனுக்கு பக்கத்தில் நின்ற மற்ற சுங்க அதிகாரி
"உம்மை என்ன செய்து விட்டோம் என்று கத்துகிறாய்?" என்றான்.
நான் அதற்கு "ஏன் என்னை மட்டும் இப்படி சோதனை செய்கின்றீர்கள்?" எனக் கேட்டேன்.
அதற்கு அவன் "உங்களிற்கு இந் நாட்டில் கூடுதல் சலுகையும் இல்லை, குறைந்த சலுகையும் இல்லை, எமது கடமையைச் செய்கின்றோம்" என்றான்.

நான் மேலும் பேச எத்தனித்த போது....
"இதற்கு மேல் கதைத்தால் உன்னை அடித்து விட்டு சோதனையிலிருந்து தப்ப முயற்சித்தாய், அதனால் தான் அடித்தோம்" என்று என்னால் கூறமுடியும் என எச்சரித்தான்.

இவ் எச்சரிக்கையினை நான் இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. அவனின் பதில்களும் பதிலளித்த தொனியும் எம்மில் அவன் கொண்டிருந்த வெறுப்பினை காணக்கூடியதாக இருந்தது. மனதிற்குள் 'நாஜி' எனத் தட்டிக் கொண்டு மௌனமானேன். இவன் என்னை சுட்டுக் கொலை செய்து விட்டு தப்பியோட முயற்சித்ததாக காரணம் கற்பிப்பது அவனைப் பொறுத்தவரை மிகவும் எளிதானது.

'ரை ஏமாற்றுவதற்கு அந்த சுவரொட்டிகள் ?

— ம. நரேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்கிறேன் ......

உல்லாசமாய்
வான வெளியில்
இறகுகள் அசைத்த
கதிரவனை
மாலைப்பொழுதில் இழந்தேன்

இப்படியாகும் என்று யார் கண்டார் ?

ஊசிப் பெருத்த ஓர்
இரத்தத் துளியாய்
பிய்ந்து
தொங்கியது சூரியன்.

இறகுகள் எல்லாம்
பிய்த்தெறியப்பட்டிருந்தது
இறுகிய முகில்களாய்
அவை
இழுபட்டுப்போய்
இரத்தம் தோய்ந்து கிடந்தது.

என் இனிய தேசத்தின் மீது
இது நடந்தது.

கோடைகால பசுமைப் பரப்புள்
ஒளிந்து கிடந்தன
காடு தட்டிய மலைகள்.
அப்பால் தான்
எல்லாம் நடந்து கொண்டிருந்தது.

அங்கே சென்று
என்ன நடக்கிறது என்று
பார்க்கக் கூட
எனக்கு துணிவில்லை.

என் மயிர்களைக் கூட
சீண்டிச் செல்கிறது காற்று

யாரிடம் நான் தூது சொல்வேன்?

நான் நலம்
என
ஒரு துண்டுக் கடதாசியை
அனுப்பிவிட்டு
எத்தனை காலம்
என் வாழ்க்கையை ஓட்டுவது.

ஊசித் தலையுடன்
அரக்கத உருவமாய்
பூ மியை நசிக்கும் மலைகளின்
முதுகுப் புறத்தில் நின்று
எதை நான் தேடுகிறேன் ?

சொந்த மண்ணில்
ஆழப் புதைந்த
எனது வேர்களை எங்கே தேடுவது ?

சிறகு முளைத்த என் கதிரவன் எனக்கு வேண்டும்.
எனது பொழுதுகள் எனக்கு வேண்டும்
பஞ்சாய் மிதந்து
ஓடிப் பிடித்து விளையாடும் என் முகில்களை
நான் பார்க்க வேண்டும்

சிறு நீர் கழித்தாலே
குழிவிழும் மணல் பரப்பில்
புழுதிவாரி எறியும் காற்றிலும்
அநாயாசமாய்
துள்ளித் திரிந்தேன்.

உமிழ்நீரை துப்புதற்கே
அங்கும் இங்கும் பார்த்து
வாயை விரைவு படுத்தும்.
ஒரு தேசத்தில்
சுதந்திரமாய். . . .
சுதந்திரமாய். . . . . . . .
நான் வாழ்கிறேன்.

www.tamilarangam.net

# என் மெலிந்த கோலம் !

- ஆனந்தி

நான் ஏன் மெலிந்து கொண்டிருக்கிறேன்
சாப்பாடு
கிடைத்துக் கொண்டேயிருக்கிறது
ஆனாலும் ..........

அப்படியானால்
எனதுடல் அரிக்கப்படுகிறது.

எங்கெல்லாம்
வீசும் புயலில்
ஒரு கதிர்
ஒரேயொருகதிர்
எனதுடலில் பட்டால்
சிலவேளை

பலரைக் கேட்டேன்
விளக்கமில்லாப் பதில்கள்

இறுதியாய்
கூழாகிப் போன
தேசத்தில்
பிடுங்கி எறியப்பட்ட
இமை மயிரைக்
காவிவந்த காற்று கூறிற்று.

உன் தலையில்
நரை வளர்வதற்கு
எத்தனை கறுப்பு முடிகளைப்
பலிகொடுத்தாய்

உன் கிராமத்தின்
ஒழுங்கைகளைத்தின்று
மகிழ்ந்து திரிந்த
கால்களை
மாற்றானுக்கு இரவல் கொடுத்தாய்.

நீயும் உருக்குலைந்து
என்னையுமல்லவா
அழுக்காக்கிவிட்டாய்
இனியும் தேகம் மெலிவதாய்
கவலை என்ன இருக்கிறது
கவலையோடு கூறிவிட்டு
காற்று
எனைவிட்டுப் போயிற்று.

விரல் நகங் கூடப்
பாரமாய்ப் போனது
கூடவே
நீண்ட பெருமூச்சொன்று
வேற்று மணத்தோடு
மறைந்து போயிற்று.

(தீவுப் பகுதியின் தற்போதைய நிலைமையின் உணர்வில் எழுந்தது இக் கவிதை)